Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

**தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்**

திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்

**பலிக்களம்**

(திருப்பாடுகளின் காட்சி)
இன்று நான்காவது நாளாக
13 ஏப்ரல் 2003
(ஞாயிறு)

மன்ற அரங்கில் மாலை 7.00, 9.30 மணிக்கு


அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
-திருமறைக்கலாமன்றம்.

(சி-787)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 பங்குனி 30 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 ஸபர் 10 (13.04.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ் :192





கடந்த திங்களன்று ஜெனீவாவில் ஈழத்தமிழர்கள் நடத்திய பேரணியில், தலைவர் பிரபாகரனின் முழு உருவப்படம் தாங்கிவரப்படுவதையும், அதில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (மேலும் படங்கள் 9 ஆம் பக்கத்தில்)

## இனத்துவேஷ மிதிவெடி அகற்றப்படவேண்டும் என்கிறார் தேரர்

(கொழும்பு)

வடக்கில் மிதிவெடிகள் அகற்றப்படுவதைப் போன்று, தெற்கில் சிங்கள மக்களின் மனங்களில் உள்ள இனத்துவேஷ மிதிவெடிகளும் அகற்றப்பட வேண்டும் எனக் கூறியுள்ளார் கேகாலை பஞ்சார தேரர்.

காலியில் நடைபெற்ற சமாதானத்திற்கான மௌனவிரத நிகழ்வின் ஆரம்பவைபவத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

போராளியாக இருந்த பிரபாகரன் சமாதானத்துக்குத் திரும்பியுள்ளார். அவரை மீண்டும் போருக்குக் கொண்டு செல்லாமல் தடுக்க வேண்டிய பொறுப்பு சிங்கள மக்களுக்கேதான் உள்ளது.

சுதந்திரக் கட்சியினதும் ஜே.வி.பியினதும் இனவாதம் இனிமேலும் செல்லாது எனவும் பஞ்சாரதேரர் கூறினார். (01)

# ஜப்பான் மாநாட்டில் பங்குபற்றுவதா? மீள்பரிசீலிப்பதாக புலிகள் அறிவிப்பு!

## வொஷிங்ரனுக்கு அழைக்காததை ஆட்சேபித்து நடவடிக்கை

(கொழும்பு)

**நாளை வொஷிங்ரனில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் முன்னோடிக் கூட்டத்துக்குத் தம்மை அழைக்காததை ஆட்சேபித்து - எதிர்வரும் ஜூன் மாதம் ஜப்பானில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் பங்குபற்றும் தமது முடிவை மீள்பரிசீலிக்கவுள்ளதாக விடுதலைப் புலிகள் நேற்று அறிவித்துள்ளனர்.**

இது குறித்து விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி அரசியற்துறை நடுவப்பணியகம் விடுத்துள்ள அறிக்கையில்,

சமாதானப் பேச்சுக்களின்போது அரசும் விடுதலைப் புலிகளும் சர்வதேச உதவியுடன் நெருங்கிச் செயற்படுவது எனக் காணப்பட்ட இணக்கப்பாட்டை மீறும் செயலாக இது அமைந்துள்ளது. வொஷிங்ரன் மாநாட்டிலிருந்து எம்மைப் புறந்தள்ளும் இலங்கை அரசின் நடவடிக்கையாக இது அமைந்துள்ளது. இந்த மாநாட்டிலிருந்து விடுதலைப் புலிகளைத் திட்டமிட்டுப் புறந்தள்ளிவைப்பதான இந்நடவடிக்கை, தமிழர் தாயகத்தின் பொருளாதாரத்தையும், சமூக நலன்களையும், நம்பிக்கையையும் பாதிக்கச் செய்யும். அனுசரணையாளரான நோர்வேயும் மற்றும் இலங்கை அரசும் இந்த முக்கியமான முன்னோடி உதவிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் கலந்துகொள்வதற்கு ஆவன செய்யாமை குறித்தும், பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்யாமை குறித்தும் நாம் ஆழ்ந்த ஏமாற்றம் அடைந்துள்ளோம்.

அரசின் சில நடவடிக்கைகள் முன்னர் காணப்பட்ட நம்பிக்கைகளை அழித்து விடுவதாகவே தற்பொழுது இருக்கின்றன. அரச படைகள் தொடர்ந்தும் தமிழ் மக்களின் வீடுகள், கோவில்கள், பாடசாலைகள் என்பவற்றில் தங்கியிருந்து யுத்தநிறுத்த மீறலைப் புரிந்து வருகின்றன. இராணுவ உயர் மட்டத்தின் இத்தீவிரமான போக்கும், அரசின் நிர்வாகமும் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் மீளக்குடியேற முடியாத நிலையை உருவாக்கியுள்ளது.

போரினால் முழு (10 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கில் தனியரசு; புலிகள் உருவாக்கிவிட்டனர்

### 'இந்து' நாளிதழுக்கு ஜனாதிபதி பேட்டி



நாட்டின் வடக்கிலும், கிழக்கின் சில பகுதிகளிலும் உள்ள தமது பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் தனியான அரசு ஒன்றை அமைத்து விட்டதாக, இந்தியாவின் 'இந்து' நாளிதழுக்கு வழங்கிய பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

இந்திய விஜயத்தின்போது 'இந்து' நாளிதழின் செய்தியாளர் அமிர் பர்வாவுக்கு அளித்த விசேட பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா மேலும் தெரிவித்திருப்பதாவது,

விடுதலைப் புலிகள் கடந்த ஒரு வருடப் பேச்சுக்களின் மூலம் தமது போராளிகளின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மீனவர்களை விரட்டச் சென்ற

## வடமராட்சி மீனவர்களை கடற்படை விரட்டியடித்தது

(வடமராட்சி)

எல்லைமீறி வந்து வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடித்தும், உள்ளூர் மீனவர்களின் உடைமைகளைச் சேதப்படுத்தியும் வந்த இந்திய மீனவர்களைத் திருப்பி அனுப்பச் சென்ற வடமராட்சி மீனவர்களைக் கடற்படையினர் விரட்டியடித்தனர்.


நேற்று 3 மணியளவில் - நூற்றுக்கும் மேற்பட்ட ட்ரோலர்களில் வடமராட்சிக் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களைக் கைது செய்யுமாறு கடற்படையினருக்கு அறிவித்தும், கடற்படையினர் அவர்களைக் கைதுசெய்யாதுவிட்டதன் காரணமாக - வடமராட்சிப் பிரதேசத்திலிருந்து மயிலிட்டி, காங்கேசன்துறை, சுப்பர்மடம், முனைப் பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் இந்திய மீனவர்களைத் தடுப்பதற்காகச் சென்றவேளை, அவர்களைக்

(10 ஆம் பக்கம் பார்க்க)




ஆறு வருடங்களின் பின்னர் கொழும்பிலிருந்து மட்டக்களப்புக்கான ரயில் சேவை நேற்று ஆரம்பிக்கப்பட்டு முதலாவது ரயில், மட்டக்களப்பு ரயில் நிலையத்தை வந்தடைவதைப் படத்தில் காணலாம்.

### விண்ணாணம் விநாசியர்



தனியரசு அமைச்சுப்போட்டினம் எண்டு சொல்லிட்டு, சுயாட்சி கொடுக்கக்கூடாது எண்டுமெல்லே சொல்லுறிங்கள்!

SERENDIB AIRLINE

யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்

021 - 2223916, 0777 - 317019
01-505632, 074-612656, 01-390128

(சி-730)

# தென்னாபிரிக்க அனுபவங்கள் இலங்கைக்கும் பொருந்தும்!

## இனப்பிரச்சினை தீர்வு குறித்து அமைச்சர் பீரிஸ்

தென்னாபிரிக்காவில் - இனத்து வேஷம் என்ற நிலையில் இருந்து ஜனநாயகம் என்ற நிலைக்கு மாறிய வழிமுறைகளினதும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்ட பொருத்தமான மாற்றங்களினதும் அனுபவங்களை, இலங்கையும் பின்பற்ற முடியும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினையும் தேசிய ஒற்றுமையும் என்ற தலைப்பில்- பாடசாலைக் கல்வி அமைச்சு ஒழுங்கு செய்த, கருத்தரங்கில் பங்குபற்றி உரைநிகழ்த்துகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டிய அவசியத்தை, நாட்டின் பெரும்பாலான மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். இந்த அரசியற்தீர்வில் அதிகாரப் பகிர்வு என்பது அடிப்படை அம்சமாகும். இத்தகைய சூழ்நிலையில் மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தி, அவர்களின் கருத்துக்களையும் தேவைகளையும் அறிந்துகொள்வது மிகவும் அவசியமாகும் என்று குறிப்பிட்ட பீரிஸ் -

இந்த வகையில் - பொதுமக்களின் அபிப்பிராயங்களை உருவாக்கும் மாபெரும் பொறுப்பு கல்வித் துறையினரிடம் உள்ளது என்றும் தெரிவித்தார்.

# வொஷிங்ரன் மாநாட்டில் இந்திய தூதர் மான்சிங்!

(கொழும்பு)

வொஷிங்ரனில் நாளை நடைபெறவுள்ள- இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் முன்னோடி மாநாட்டில், இந்தியா சார்பாக அமெரிக்காவுக்கான இந்தியத்தூதுவர் லலித் மான்சிங் கலந்து கொள்ளவுள்ளார் என இந்திய அரசு அறிவித்துள்ளது.

ரோக்கியோவில் எதிர்வரும் ஜூன்மாதம் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு வெற்றிகரமாக நிறைவேற, தனது ஒத்துழைப்பை வழங்குவதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.



தேசிய சேமிப்பு வங்கியின் 107 ஆவது கிளையை மானிப்பாயில் திறந்து வைத்து, அதன் தலைவர் டி.எம்.சுவாமிநாதன் உரையாற்றுவதையும் அருகில் அமைச்சர் மகேஸ்வரன், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் அமர்ந்திருப்பதையும் காணலாம்.

## உயர் பெறுமதியான முத்திரைகள் கிடைத்தன

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதம தபாலகத்திற்கு ரூபா 500, ரூபா 1000 பெறுமதி கொண்ட முத்திரைகள் கிடைத்துள்ளன.

## தமிழ்ப் பகுதி ஆஸ்பத்திரிகளுக்கு 16 அம்புலன்ஸ் வண்டிகள்

நிகொட் நிறுவனம் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவியுடன், வடக்கு- கிழக்கு மாகாண வைத்தியசாலைகளுக்கு 16 அம்புலன்ஸ் வண்டிகளை வழங்கியுள்ளது.

இந்த வண்டிகளை வடக்கு- கிழக்கு ஆளுநரின் பணிமனை வளாகத்தில் வைத்து, மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரத்னாயக்கவிடம், நிகொட் திட்ட நிறுவனப் பணிப்பாளர் லங்கா நேசன் கையளித்தார்.

இதனையடுத்து - அம்புலன்ஸ் வண்டிகள் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, வவுனியா, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களின் மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர்களிடம் உடனடியாகக் கையளிக்கப்பட்டன.

## கவுணாவத்தை செல்ல அனுமதி

(யாழ்ப்பாணம்)

உயர்பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள கவுணாவத்தை வைரவர் ஆலயத்துக்கு - நாளையும், எதிர்வரும் புதனன்றும் பொது மக்கள் செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆலயத்துக்குச் செல்லும் மக்கள் காலை 9.30 மணிக்கு முன்பாக சேந்தாங்குளம் சோதனைச் சாவடிக்கு வருகை தரவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (68)


## அரசாங்க கேள்வி அறிவித்தல்

**புனர்வாழ்வளிப்பு அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சினால் யாழ்.மாவட்டத்திற்கு வழங்கப்படும் அத்தியாவசிய உணவு வகைகள் வழங்கலுக்கான கேள்விகோரல்**

1) யாழ். மாவட்டத்தில் இலவச நிவாரணத்திற்கு 1500 மெற்றிக் தொன் பிறிமா கிறீன் மா விநியோகிப்பதற்காக கேள்விகள் பிறிமா நிறுவனத்தின் யாழ்ப்பாண முகவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.

**மாதாந்த கேள்வித் தொகை**

| 2003 ஏப்ரல் | 2003 மே | 2003 ஜூன் |
|---|---|---|
| 1500 MT | 1500 MT | 1500 MT |

கேள்விகளை சமர்ப்பிக்க விரும்பும் முகவர்கள் மீளளிக்க முடியாத கேள்வி வைப்பாக ரூபா 500.00 இனை யாழ். மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்தில் செலுத்தி கேள்விப்படிவங்களையும் கேள்வி ஆவணங்களையும் 2003.04.15ம் திகதி தொடக்கம் 2003.04.29ம் திகதி வரையான காலப்பகுதியில் அலுவலக நாட்களில் மு.ப. 10.00 மணி தொடக்கம் பி.ப 2.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

2) கேள்வியை சமர்ப்பிப்பதற்கு பந்தி 01 இல் குறிப்பிட்டுள்ள ஆர்வம் உள்ளவர்கள் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்பாக (விலை கேள் முறி - BID BOND) மெற்றிக் தொன் ஒன்றிற்கு (01 Mt.) ரூபா நானூறுப்படி (ரூபா 400.00) செலுத்துதல் வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது.)

3) பூரணப்படுத்திய இரு கேள்விப்படிவத்தினை தலைவர், மாவட்ட கேள்விச் சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் (அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்) என முகவரியிடப்பட்ட நீள தபால் உறையில் நேரடியாகவோ / தபால் மூலமோ யாழ் செயலக மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலக (கணக்காளரது) அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2003.04.30 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்பாக சேர்க்கவும். அன்றைய தினம் பி.ப. 3.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோரியவர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.


4) நீள தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிறிமா கிறீன் மா வழங்கலுக்கான கேள்வி" என எழுதப்பட வேண்டும்.

5) ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்காரர் ஒப்பந்தத்தின் பெறுமதியில் 10% மீளளிக்கப்படக்கூடிய வைப்பாக (செயல் படுத்தல் முறிக்காக - PERFORMANCE BOND) செலுத்தி ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும். (விபரம் கேள்வி ஆவணத்திலுள்ளது)

**செ.பத்மநாதன்,**
**தலைவர்/அரச அதிபர்**
**மாவட்ட கேள்விச்சபை/**
**மாவட்டச் செயலகம்.**
**யாழ்ப்பாணம்.**
**2003.04.11**

(சி-825)


# வடமராட்சி பாடசாலைகளின் மேலும் சில பரீட்சை முடிவுகள்



கு.அபிமாறன் | பி.பியோமதுசூதனன்

க.பொ.த(சா/த) பரீட்சை முடிவுகளில் வடமராட்சியின் மேலும் சில பாடசாலைகளின் முன்னணிப் பெறுபேறுகள் வருமாறு-

*உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி*

குகதாசன் அபிமாறன் 8A 2B, தர்மலிங்கம் சர்மிலன் 6A 3B C, அமிர்தலிங்கம் சுபிந்தன் 5A 2B 3C, குணசிங்கம் பரிபூரணன் 4A 2B 2C S, சுந்தரலிங்கம் சுதர்சன் 3A 4B C S, கந்தையா இந்திரன் 3A 2B 4C S, சந்திரலிங்கம் துசாந்தன் 3A 5C 2S.

*உடுப்பிட்டி மகளிர் கல்லூரி*

மகிழினி கைலயங்கிரிச்செல்வம் 9A B, ரத்தினாதேவி ரங்கநாதன் 9A B, கார்த்திகா சின்னராசா 7A 3C.

*கம்பர்மலை அ.த.க பாடசாலை*

பிரான்சிஸ் கலாசியா பியோமதுசூதனன் 10A.

*கரணவாய் மகாவித்தியாலயம்*

ஐ.ஜெயரூபிணி 3A B 3C 3S.

(116)

# இரவில் அட்டகாசம் புரிந்த கும்பல் பொதுமக்களால் நையப்புடைப்பு!

(யாழ்ப்பாணம்)

இரவுவேளைகளில் பொதுமக்களின் தூக்கத்தைக் கெடுத்து வந்த கும்பல் ஒன்று, பொதுமக்களால் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்ட சம்பவமொன்று கடந்த வெள்ளி இரவு கொழும்புத்துறை கணக்கர் சந்திப் பகுதியில் இடம்பெற்றது.

இரவுவேளை, மக்கள் ஆழ்ந்து தூங்குகின்ற நேரம் 'ஐயோ திருடன்' எனக் கூச்சலிட்டு பொதுமக்களின் தூக்கத்தை கெடுப்பது, வீடுகளுக்கு கல்லால் எறிவது, இரவுவேளை தெருவில் செல்லும் வயோதிபர் மீது சேட்டை புரிதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்த கும்பலையே பொதுமக்கள் மடக்கிப் பிடித்து தண்டனை வழங்கினர்.

இவர்களை பொலிஸில் ஒப்படைக்க முற்பட்டவேளை, சம்பந்தப்பட்டவர்கள் மன்னிப்புக் கோரியதையடுத்து எச்சரிக்கையுடன் விடப்பட்டனர்.

(சு)

## இன்றைய நாள் இனிய நாள்

**13-04-2003 - ஞாயிற்றுக்கிழமை**

**மேடம் :-** சந்தோஷமிகுதி, சீவனநிறைவு, பிரயாணத்தால் நன்மை, அதிகாரவிருத்தி.

**இடபம் :-** சரீரசுகக் குறைவு, சிநேகிதரால் கவலை, பொருள் நஷ்டம், மனக்கவலை.

**மிதுனம் :-** பிரயாணத்தால் நன்மை, பொருட்சேதம். காரிய சித்தி, தொழிற்சிறப்பு.

**கர்க்கடகம் :-** பிரயாசை மிகுதி, தாரபுத்திரருக்கு ரோகம். புத்தித் திறமை, வித்தை விருத்தி.

**சிங்கம் :-** ஊக்கமிகுதி, பிரயாணக்கவலை, பொருள் விருத்தி, காரியானுகூலம்.

**கன்னி :-** வாகன பூமியால் லாபம், மனமகிழ்ச்சி, நற்கீர்த்தி, பொருள்விருத்தி.

**பிரபல சோதிடர்**
**எஸ்.குகநேசன்**

**துலாம் :-** சத்துருபயம், தனித்தநிலை, புத்திர பந்துக்களால் கவலை. பொருள் வரவு.

**விருச்சிகம் :-** தாரசுகத் தடை, பொருள் நஷ்டம், இனசன கொண்டாட்டம் நற்குணவிருத்தி.

**தனு :-** பணவரவு, அதிகார வெற்றி, பேரும்புகழும் அடைதல், சத்துருபயம்.

**மகரம் :-** பணக்குறைவு, ஏமாற்றப்படுதல், புத்திக்குறைவு, பலவழிகளாலும் செலவுகள்.

**கும்பம் :-** தாழ்ந்தநிலை, தேகசுகக் குறைவு, மதிப்பு குறைவு, காரிய விக்கினம், பிரயாணக்கஷ்டம்.

**மீனம் :-** இனசன கவலை, அதிக செலவு, பலவித துன்பம், அதிக பிரயாசை, தேகபலக் குறைவு.


**சிறுவிளம்பரம்**

**விற்பனைக்கு உண்டு**

அரியாலை சாஸ்திரியார் லேனில் 1 1/2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய தொ.பே. இல:- 0777-734175 (சி-820)

**ராஜா** யாழ்ப்பாணம்.

ஸ்ரீகாந், பூமிகா, விவேக், ராதிகா நடித்த
**ரோஜாக்கூட்டம்**
10.30, 2.30, 6.30
இரவு 9.30 மட்டும் **HOLLOW MAN**
புதுவருட வெளியீடு
**அரசு**
(சி-732)

**நிரஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
**Jurrasic Park - 3**
(பாடசாலை மாணவர் பார்த்து மகிழக்கூடியது)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
**BEST OF THE BEST**
14.04.2003 முதல் ரமணா
(சி-731)

**பொங்கிடும் புது வருடத்தில் மங்கல ஆரம்பம்**

**ராஜ் லங்கா ருவர்ஸ்**

விமானப் பயணிகளின் பயண ரிக்கெட்டுக்கள் ஒழுங்கு செய்வதில் முன்னோடிகள்

**ராஜ் லங்கா ருவர்ஸ்**

வெளிநாடு செல்வதற்கு வழிதெரியாது தவிக்கும் நீங்கள் நம்பிக்கையுடன் உங்கள் பயணம் தொடர ஒரு முறை நாடுங்கள்.

**ராஜ் லங்கா ருவர்ஸ்**

உங்கள் விமான ரிக்கெட்டுகளுக்கும் வெளிநாட்டுப் பயணம் நம்பிக்கையுடன் சிறக்கவும் ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

தொடர்புகளுக்கு:-
ராஜ் லங்கா ருவர்ஸ்
220A, 2ஆம் குறுக்குத் தெரு
ஆஸ்பத்திரி வீதி வழியாக,
யாழ்ப்பாணம்.

T.P 021 222 2273 Hot line: 0777686161 (சி-821)

# புலிகளின் அரசியல் விவகாரக்குழு இன்று தாயகம் திரும்புகின்றது!

ஸ்கன்டிநேவிய நாடுகளில் நடைமுறையிலுள்ள சமஷ்டி அதிகாரப் பகிர்வு முறைகள்குறித்து ஆராயச் சென்றிருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர், தமது முதல் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு இன்று தாயகம் திரும்பவுள்ளதாகத் தெரியவருகின்றது.

நோர்வே, சுவீடன், பின்லாந்து, ஆலன்ட் ஆகிய இடங்களுக்குச் சென்று அந்நாட்டு அதிகாரப் பகிர்வு முறைகள் பற்றி ஆராய்ந்த புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் கடந்த புதன்கிழமை டென்மார்க் சென்றிருந்தனர்.

டென்மார்க்கில் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினரை, அந்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சு உயரதிகாரி லாஸ் ஒ ஊசன் மற்றும் வெளிநாட்டமைச்சு அதிகாரி ஆகியோர் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

இதன்போது, அந்நாட்டிலுள்ள அதிகாரப் பகிர்வு முறைமை குறித்து விரிவான விளக்கம் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினருக்கு வழங்கப்பட்டது.

அத்துடன், டென்மார்க்கின் உள்ளூராட்சி அமைப்பு முறைகள் குறித்தும் இது தொடர்பான அதிகாரிகளுடன் கலந்துரையாடி அறிந்து கொண்ட புலிகள், டெனிஸ் மனித உரிமைகள் மையத்துக்குச் சென்று மனித உரிமை பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும் அறிந்துகொண்டனர்.

இந்தக் குழுவினர் இன்று தமது முதலாவது சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு பாரிஸ் ஊடாக கட்டுநாயக்க விமான நிலையம் திரும்பி, வன்னிக்குச் செல்வார்கள் எனத் தெரியவருகின்றது.

## இராணுவ உளவுப் பிரிவினர் அனைவரையும் புத்தாண்டுக்கு முன் கொல்ல புலிகள் திட்டம்!

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

தமிழீழ விடுதலைப் புலிகள் அரசாங்கத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கையெழுத்திட்டிருக்கின்ற போதிலும், தொடர்ந்தும் போர் நிறுத்த மீறல்களில் ஈடுபட்டு வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி 1956 ஆம் ஆண்டுத் தேர்தலில் பெற்ற வெற்றியை நினைவுகூரும் விழாக்களைக் கண்டியில் நடத்திவரும் மகிந்த ராஜபக்ஷ செய்தியாளர்களிடம் பேசியபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, விடுதலைப் புலிகள் அரசுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதுடன், தமக்குத் தேவையான அனைத்தையும் நிறைவேற்றி வருகின்றார்கள். இராணுவத்தின் உளவுப் பிரிவில் பணியாற்றுவோரை அவர்கள் கொன்றொழித்து வருகின்றனர்.



இதுவரை பல இராணுவப் புலனாய்வு உத்தியோகத்தர்கள் கொல்லப்பட்டுள்ளனர். புதுவருடத்துக்கு முன்னர் இராணுவப் புலனாய்வுப் பிரிவில் பணியாற்றும் அனைத்து உத்தியோகத்தர்களையும் கொன்றுவிடும் திட்டத்துடன் புலிகள் இருப்பதாக மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## பட்டினிக்கு எதிரான இயக்கம் ஊக்குவிப்பு

(மானிப்பாய்)

பட்டினிக்கு எதிரான இயக்கம் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவு உட்பட 16 கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள 2ஆயிரத்து 637 குடும்பங்களுக்கு வருமான ஊக்குவிப்புக்கான உதவித் திட்டங்களை அண்மையில் வழங்கியுள்ளது.

அத்துடன், இப்பகுதியிலுள்ள 34 குடிநீர்க் கிணறுகளையும், 14 விவசாயக் கிணறுகளையும் மேற்படி நிறுவனம் புனரமைப்புச் செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளது. (100)

## 2 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் மீட்பு

(கொழும்பு)

கொழும்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள வீடொன்றிலிருந்து இரண்டு கோடி ரூபா பெறுமதியான பத்துக் கிலோ எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருட்கள் பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

கொள்ளுப்பிட்டிப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, நேற்று முன்தினம் காலை அங்கு சென்ற பொலிஸார் வீட்டைச்சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்திய போது இவை மீட்கப்பட்டுள்ளதாகக் கொள்ளுப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர். (01)

## உயர்தரப் பரீட்சையில் இம்முறை விடைத்தாளுக்குப் பதில் புத்தகம்!

(கொழும்பு)

எதிர்வரும் 21 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் இம்முறை விடை எழுதும் தாள்களுக்குப் பதிலாக, 12 பக்கங்களைக் கொண்ட விடை எழுதும் புத்தகம் வழங்கப்படவுள்ளது.

பரீட்சை மண்டபங்களிலிருந்து விடை எழுதும் தாள்கள் சட்ட விரோதமாக வெளியில் எடுத்துச் செல்வதைத் தடுக்கவே இந்தப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இம்முறை உயர்தரப் பரீட்சையில் 2 இலட்சத்து 12 ஆயிரத்து 294 மாணவர்கள் பாடசாலை மூலமாகவும், 39 ஆயிரத்து 533 மாணவர்கள் தனிப்பட்ட ரீதியிலும் பரீட்சைச்குத் தோற்றுகின்றனர்.

இதேவேளை, இனிவரும் காலங்களில் ஏப்ரல் மாதத் தொடக்கத்திலேயே உயர்தரப் பரீட்சையை நடத்துவதென்றும், இதன்மூலம் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்க மாணவர்களுக்குக் கூடிய அவகாசம் கிடைக்குமென்றும் பரீட்சை ஆணையாளர் மகிந்த விஜேரத்ன தெரிவித்தார்.



அச்சுவேலி இடைக்காடு மகாவித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் விளையாட்டு போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் மலர்மாலை அணிவித்து வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம். (17)




வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடத்தப்பட்ட கல்விக் கண்காட்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் வடமராட்சி வலய சித்திரப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவசுப்பிரமணியம் (றமணி) மங்கள விளக்கேற்றி கண்காட்சியை ஆரம்பித்து வைப்பதையும், அருகில் பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி புஸ்பலிங்கம், கல்லூரி அதிபர் விஜயலட்சுமி சுகுமாரன் மற்றும் ஆசிரியர்களையும் படத்தில் காணலாம். (23)

## பரீட்சைக்கு இருக்கும் முக்கியத்துவம் மதிப்பீட்டுக்கும் இருக்க வேண்டும்!

### மேலதிக பரீட்சை ஆணையாளர் வலியுறுத்துகின்றார்

க.பொ.த.சாதாரணதரப் பரீட்சைக்கு இருக்கும் அதே முக்கியத்துவம் மதிப்பீட்டுப் பரீட்சைக்கும் இருக்க வேண்டும். பதினொரு வருடங்களாக மாணவர்கள் கற்ற கல்வியை மூன்று மணித்தியாலப் பரீட்சையில் வெளிக்காட்டிவிட முடியாது.

இவ்வாறு மேலதிக பரீட்சை ஆணையாளர் குலரத்ன தெரிவித்தார்.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் மதிப்பீட்டுப் பரீட்சைகள் வெற்றிகரமான விளைவினைத் தந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், பாரம்பரிய பரீட்சை முறை உளவியல் ரீதியாக மாணவர்களின் திறமையை வெளிக்காட்டாது. இதனால் மாணவர்களின் கல்வி ஆற்றலில் பின்னடைவு ஏற்பட்டது. மாணவர்களின் உண்மையான ஆற்றலை மதிப்பிடத் தொடர் மதிப்பீட்டு முறை உலகின் பல்வேறு நாடுகளிலும் அமுல் நடத்தப்படுகிறது.

இந்த மதிப்பீட்டு முறை மாணவர்களின் ஆற்றலை விருத்தி செய்கின்றது. மாணவர்கள் இதுவரை பாடசாலைக் கல்வியை விட அதிக நேரத்தைத் தனியார் கல்வி நிலையங்களிலேயே செலவிட்டனர்.

இப்போது தொடர் மதிப்பீட்டு முறை மூலம் மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களில் தங்கியிருக்கும் நிலையைக் குறைத்து வருகிறது.

க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியெய்தி உயர்தரம் கற்கத் தகுதியான மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவது, இங்கு கல்விசார் சமூகம் உருவாகி வருவதையே எடுத்துக்காட்டுகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திரைப்படக் காட்சி

யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப்படிப்புகள் அலகு வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரின் "பியானிஸ்ற்" (பியானோ வாசிப்பவன்) என்ற ஆங்கிலத் திரைப்படம் இன்று காலை 10 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படும்.

இத்திரைப்படத்திற்காக சிறந்த நெறியாளருக்கான 'ஒஸ்கார் விருது'- றோமன் பொலன்ஸ் கிக்கும், சிறந்த நடிகருக்கான விருது அட்ரியன் பரோடிக்கும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. ஆர்வலர்கள் எவரும் பங்கு கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

## ஈ.பி.டி.பி. உறுப்பினரின் சடலம் கொழும்புக்கு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை தெற்குப் பகுதியிலுள்ள மலசலகூடத்திலிருந்து கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்ட அமிர்தலிங்கம் ராஜன் (வயது 21) என்பவரது சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக சுன்னாகம் பொலிஸாரினால் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. (சு)

## தொடர்புகளை இழந்துள்ள ஈராக்கிய தூதரக அதிகாரிகள்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஈராக்கியத் தூதரகத்தில் பணியாற்றும் இரண்டு அதிகாரிகளும் தமது அரசாங்கத்துடனான தொடர்புகளைத் தாம் இழந்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.

இலங்கையிலுள்ள ஈராக் தூதரகத்தில் இரண்டு அதிகாரிகள் மட்டுமே தற்போது உள்ளனர். இவர்களே, அமெரிக்கத் தாக்குதலுக்குப் பின்னர் தமது அரசாங்கத்துடனான தொடர்புகளை இழந்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த ஈராக் தூதரக அதிகாரிகளில் ஒருவரான சஜித் அபாஸ் - சதாமின் ஆதிக்கம் கவிழ்ந்துவிட்டதாகவும், இனி அங்கு இனங்களுக்கிடையிலான மோதல்கள் அதிகரிக்கலாம் எனக் கவலை தெரிவித்தார்.

அதேவேளை, ஈராக்கில் புதிய அரசு அமைக்கப்பட்டவுடன் தாம் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## இந்தியாவுக்கான ஏற்றுமதிகள் 142 வீதத்தால் அதிகரிப்பு!

(கொழும்பு)

இலங்கைப் பொருட்கள் இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவது கடந்த வருடத்தில் 142 சதவீதத்தினால் அதிகரித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை - இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ், இலங்கையிலிருந்து ஏற்றுமதியாகும் 2800 பொருட்களுக்கு வரி விலக்களிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மூன்று வருடங்களுக்கு நடைமுறையில் இருக்கும்.

2001 ஆம் ஆண்டில் இந்தியாவுக்கான ஏற்றுமதி 90 மில்லியன் டொலராக இருந்தது. 2002 இல் இத்தொகை 160 மில்லியன் ரூபாவாக அதிகரித்திருப்பதாகவும், அதேவேளை இந்தியாவிலிருந்து 110 மில்லியன் டொலர் பெறுமதியான பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

## குடிநீர் விநியோகத்துக்கு 25 மில்லியன் தேவை!

கடந்த 2000 ஆம் ஆண்டு தென்மராட்சியில் ஏற்பட்ட யுத்தத்தால் சாவகச்சேரி நகரசபையால் மேற்கொள்ளப்பட்ட குடிநீர் விநியோகத் திட்டம் தடைப்பட்டு இருந்தது.

தற்போது குடிநீர் விநியோகத் திட்டத்தை மீள ஆரம்பிக்க 12.5 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது. 18 பொதுக் கிணறுகளைப் புனரமைக்க 1.3 மில்லியன ரூபா தேவைப்படுவதாகவும், குழாய் மூலம் குடிநீர் வழங்க 11 மில்லியன் ரூபா தேவையெனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. (34)

# பரீசைக்குத் தயாராகும் மாணவர்களே உங்களுக்குச் சில ஆலோசனைகள்

## பரீட்சை மண்டபத் தொழிற்பாடுகளே மாணவர்களின் எதிர்காலக் குறிகாட்டி.

**அறிமுகம்:**

இம்மாதம் 21 ஆம் திகதி முதல் ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைகள் ஆரம்பமாகி நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் திட்டமிடப்பட்டு செய்யப்பட்டுவருகின்றன. மறுபுறத்தில் மாணவ, மாணவியர்கள் கால்கடுக்க ஓடித்திரிந்து கற்றது ஓய்ந்து, அவர்கள் வீட்டில் தனியாகவோ, குழுவாகவோ சிரத்தையோடும், ஓய்வுடனும் பரீட்சைக்காகத் தம்மை இறுதி நேரத் தயார்படுத்தலில் ஈடுபட்டுக்கொண்டிருப்பார்கள்.

### மாணவர்களைத் தயார்படுத்தும் பொறுப்புக்கள்

பரீட்சையை எதிர்நோக்கித் தயாராகும் மாணவர்களை உற்சாகப்படுத்தும் பொறுப்பு சமூகத்தில் பல்வேறு பிரிவினர்களிடமும் உள்ளது என்பதனை எவரும் மறுத்துக் கூறிவிடமுடியாது. மாணவர்கள் தமக்குரிய பரீட்சைகளை நல்லமுறையிலே எதிர்கொண்டு, உரிய பெறுபேறுகளைப் பெற்று, பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி, எதிர்காலத்தில் நல்ல பிரஜைகளாக வெளியேற வகைசெய்வது பெற்றோர் முதல் கல்வி நடவடிக்கைகளைத் திட்டமிடும் உயர் பொறுப்புகளிலுள்ளவர்களையும் சார்ந்திருக்கிறது. இங்கு உறவினர்களும், அயலவர்களும், ஆசிரியர்களும் விதிவிலக்கு அற்றவர்கள் என்று கூறிவிடமுடியாது.

### ஆசிரியர்களின் பொறுப்புகள்

ஆசிரியர்கள் வேளையுடன் மாணவர்களின் பாடத்துறைகளுக்கான பாடப்பரப்புகளை முடித்துக் கொடுத்திருப்பார்கள். எனினும், பரீட்சை மதிப்பீட்டு அனுபவமுள்ள ஆசிரியர்கள் கருத்தரங்குகளை ஒழுங்கமைத்து மாணவர்களைப் பரீட்சைக்குச் சரியாக வழிகாட்டலாம். அவ்வாறே மாணவர்களுக்கு ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்தும் உதவலாம்.

### வீட்டிலுள்ளவர்களின் பொறுப்புகள்

பரீட்சைக்காகத் தயாராகும் மாணவர்களிற்கு வீட்டிலுள்ள சகோதரர்கள், சகோதரிகள், பெற்றோர்கள், உறவினர்கள் ஆகியோர்கள் பல்வேறுவகைகளில் உதவமுடியும். இன்று தொலைக்காட்சி ஒவ்வோர் வீட்டிலும் அத்தியாவசியமான ஒரு பொருளாகக் காணப்படுகின்றது. எனவே, வீட்டிலுள்ளவர்கள் இக்காலங்களிலே தொலைக்காட்சியின் பாவனையைக் குறைத்து அனுசரித்தல் வேண்டும். அப்பொழுதுதான் பரீட்சைக்காகத் தயாராகும் மாணவர்கள் இடையூறின்றிக் கற்பார்கள். அதேபோன்று, வீட்டிலுள்ள வானொலிப் பெட்டிகளையும் உரத்து ஒலி எழுப்புவதனைத் தவிர்க்கவேண்டும். இவ்வாறே பரீட்சைக்காகத் தயாராகும் மாணவர்களின் வீட்டிற்கு அருகிலுள்ள அயலவர்களும் உதவிக்கொள்ளலாம்.

**பொன்னையா அரவிந்தன்**
**(B.Sc Dip in Ed)**
**ஹாட்லிக் கல்லூரி**

### மாணவர்களின் பொறுப்புகள்

மாணவர்கள் தமக்குரிய பாடங்களை ஐயமின்றிக்கற்று, நேர முகாமைத்துவத்திற்கிணங்க பயிற்சிகளையும், வினாக்களையும், கடந்த கால வினாக்களையும் படிமுறையாக மீண்டும் மீண்டும் செய்து நன்கு பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். அதேபோன்று தேவையற்ற மனவெழுச்சிகளுக்கு இடம்கொடுக்காது, மனதைக் கட்டுப்படுத்தப் பழகிக்கொள்ள வேண்டும். தமக்கு ஏற்படும் சந்தேகங்களை ஆசிரியர்களின் உதவியுடனோ அல்லது சகபாடிகளின் உதவியுடனோ நீக்கிக்கொண்டு பரீட்சை நாளை எதிர்பார்த்துச் செயற்படுவது அவசியமாகும்.

### மாணவர்களின் பரீட்சை காலத் தொழிற்பாடுகள்

மாணவர்களின் பரீட்சைக்காலத் தொழிற்பாடுகளைப் பொதுவாகப் பின்வருமாறு 3 கட்டங்களில் பிரித்து நோக்கலாம்.

1. பரீட்சைக்கு முதல்நாள் தொழிற்பாடுகள்.
2. பரீட்சைத்தினத் தொழிற்பாடுகள்
3. பரீட்சை மண்டபத் தொழிற்பாடுகள்.

முன்னர் குறிப்பிட்ட இரு தொழிற்பாடுகளும் ஏற்றமுறையில் அமைந்துகொண்டாலும், பரீட்சை மண்டபத்தில் ஒரு மாணவன் செய்யும் எந்தவொரு தொழிற்பாடுகளும் அவனின் தலைவிதியைத் தீர்மானித்துவிடும். எனவே, பரீட்சை மண்டபத்தில் மாணவர்கள் மிக்க நிதானத்துடன் செயற்பட்டுக் கொள்வது அவசியமாகும்.

### பரீட்சை மண்டபத்தில் மாணவர்கள் செய்யும் பொதுவான தவறுகள்

1. விடைத்தாளின் ஒவ்வொரு பக்கங்களிலும் தமது சுட்டிலக்கங்களை இட்டுக்கொள்ளத் தவறுதல்.
2. விடைத்தாள்களை ஒழுங்கு முறையில் இணைத்துக் கட்டத் தவறுதல்.
3. வினா இலக்கங்களை முறை மாற்றி எழுதி விடையளித்தல்.
4. விடைத்தாள்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடத்தவறுதல்.
5. விடைத்தாள்களைத் தவறுதலாகப் பரீட்சை மண்டபத்திற்கு வெளியில் எடுத்துச்செல்லுதல்.
6. சகபரீட்சார்த்திகளுடன் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது கதைக்க முற்படுவதும், விடைத்தாள் பரிமாற்றங்களை மேற்கொள்ளலும்.
7. பரீட்சையுடன் தொடர்புடைய பாடக்குறிப்புகளை வைத்திருந்து பார்த்தெழுத முற்படல்.
8. பரீட்சைத் திணைக்களம் விடுததிருக்கும் அறிவுறுத்தல்களுக்கு விலகிய நடத்தைகளைக் காண்பித்தல்.
9. பரீட்சை மண்டபத்தில் ஆள்மாறாட்டங்களைச் செய்தல்.
10. விடைத்தாள்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றாமையினால் பெருமளவு தவறுகள் விடப்படுகின்றன.
11. பரீட்சை மண்டபத்திற்கு தாமதித்து வருதல்.

எனவே, மாணவர்கள் பரீட்சை என்றால் என்ன என்பது பற்றிய தெளிவான பொருளறிவினைப் பெற்றிருப்பது, பாட அறிவுக்கு அடுத்ததாக வேண்டப்படும் விடயமாகும்.

### பல்தேர்வு விடைத்தாள்களில் விடப்படும் தவறுகள்

பல்தேர்வு வினாக்களுக்கு விடையளிக்கும் தாள்களில் விடப்படும் தவறுகள், மாணவனின் பெறுபேறுகளில் கணிசமான மாற்றங்களை ஏறபடுத்திவிடுகிறது. இத்தவறுகளை மாணவர்கள் அறிந்தும், அறியாமலும் செய்துவிடுகிறார்கள். பெறுபேறுகள் வரும்வரை தாம் பரீட்சையைச் சிறப்பாகச் செய்துவிட்டதாக எண்ணி, பெறுபேறுகள் வந்ததும் ஏமாற்றமடைந்து கொள்கிறார்கள். எனவே, வீணான ஏமாற்றத்தைத் தவிர்க்க - மாணவர்கள் கட்டாயம் விழிப்பாக இருப்பது அவசியமானது. அதைவிடுத்து, தமது தவறுகளைக் கணினியின் பிழையாகப் பொதுமைப்படுத்தி நோக்கலாகாது. எனினும், கணினிகள் விடும் தவறுகளை நீக்கப் பல்வேறுமுறையில் கணினி மயப்படுத்தப்பட்ட பெறுபேறுகள் ஆராயப்படுகின்றன. அதன் பின்னரேயே பெறுபேறுகள் வெளியிடப்படுகின்றன.

(நாளை தொடரும்...)

# சின்னஞ்சிறு செய்திகள்

## தொழில்சார் பயிற்சி

புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள குடியமர்த்துகை அமைச்சின் மனித வள அபிவிருத்திப் பிரிவினால் தொழில்சார் பயிற்சி நெறிகள் எதிர் வரும் 15 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவிருப்பதால், வலி. கிழக்கு-கோப்பாய் பிரதேசசெயலர் பிரிவிலுள்ள 8 ஆம் வகுப்பிற்கு மேல் க.பொ.த உயர்தர தராதரபத்திரம் வரை தகுதிபெற்ற ஆண்களிடமிருந்து - மேசன் பயிற்சி, தச்சு வேலைப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களை நாளை மறுதினத்திற்கு முன்பதாகப் பிரதேச செயலகத்திலுள்ள திட்டமிடல் பிரிவில் கையளிக்குமாறு பிரதேசசெயலர் கோரியுளளார். பயிற்சியாளர்களுக்கு பயிற்சிக்காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.

## சீமெந்து இறக்கும் தொழிலாளி காயம்

(நவிண்டில்)

பருத்தித்துறை துறைமுகத்தில் சீமெந்து இறக்கிக்கொண்டிருந்த வியாபாரிமூலையைச் சேர்ந்த ஆர். செல்வராஜ் (வயது 45) என்பவர் முதுகிலும், இடுப்பிலும் அடிபட்டுச் சிகிச்சைக்காக மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

## தென்மராட்சியில் பாம்புகள் பெருக்கம்

(மீசாலை)

தென்மராட்சிப் பகுதியில் தற்பொழுது பாம்புகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதனால், பாம்புக் கடிக்குள்ளாகுவோரின் தொகை அதிகரித்து வருவதாகச் சாவகச்சேரி வைத்திய அதிகாரி எஸ். அம்பிகைபாகன் தெரிவித்துள்ளார்.

கடந்த 9 ஆம் திகதி மட்டும் 4 பேர் பாம்புக்கடிக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாகச் சாவகச்சேரி வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## மின் விநியோகம் விஸ்தரிப்பு

தென்மராட்சி பிரதேசத்தில் வழங்கப்பட்டுவரும் மின் விநியோகம் மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சில பகுதிகளிற்குப் புத்தூர் சந்தியில் மின்பிறப்பாக்கி மூலம் மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. தற்போது மீசாலை வாகையடிப் பகுதியில் கடந்தவாரம் புதிதாக மின்பிறப்பாக்கி பொருத்தப்பட்டு- மீசாலை மேற்கு, மீசாலை தெற்குப் பகுதிகளுக்கு இரவுநேர மின் விநியோகம் நடைபெற்று வருகின்றது. (34)

# வாழ்க வளமுடன்

**HAPPY BIRTHDAY**

## முதலாவது அகவையில்



பெயர் : ம.டிலக்சிகா
முகவரி: உயரப்புலம், ஆனைக்கோட்டை.

## இரண்டாவது அகவையில்

பெயர் : ர.பிரியம்வதா
முகவரி: கந்தரோடை, சுன்னாகம்.



## ஒன்பதாவது அகவையில்



பெயர் : க.நிதுயா
முகவரி: மாரியம்மன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

**பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்**

**வாழ்க வளமுடன்**

சிறாரின் பெயர்:------------------------------------------------

முகவரி :------------------------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்

**பருத்தித்துறை இறங்குதுறையில்**

# முருகைக் கற்களை அகற்றுவதற்கு கனரக வாகனங்கள் பயன்படுத்தத் தடை

இறங்குதுறைகளிலுள்ள முருகக் கற்களைக் கனரக வாகனங்களின் உதவியுடன் அகற்றுவதற்குப் படையினர் அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

வடமராட்சி கரையோரப் பகுதியில், மீனவர் இறங்குதுறைகளில்- கடந்த இருபது வருடங்களாக அகற்றப்படவில்லை. இதனால், தற்போது கடற்தொழிலுக்குச் செல்லும் படகுகள், வள்ளங்கள் முருகைக்கற்களுடன் மோதுவதால், இவை சேதமடைவதுடன், நடுக்கடலில் உயிர் ஆபத்துக்களையும் ஏற்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் முருகைக்கற்களை அகற்றுவதற்காகக் கொழும்பிலுள்ள நிறுவனம் ஒன்றுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அவர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கு கரையோரப் பகுதிகளில் காவற்கடமையில் ஈடுபடும் படையினரிடம் அனுமதி தருமாறு கோரியபோது- எந்தவிதக் கனரக வாகனமும் கற்களை அகற்றுவதற்குப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனிதவலுக்களைப் பயன்படுத்தி அகற்றுமாறும் படைத்தரப்புக் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை- கடந்த வருட இறுதியில் மனிதவலுக்களைக் கொணடு பாதைகளை அகற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தபோதிலும், பினனர் படைத்தரப்பு அனுமதி வழங்கியிருந்தனர். மனிதவலுவைக் கொண்டு அகற்றுவதில் ஏற்பட்ட காலதாமதங்களும், செலவுகளையும் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இந்த முயற்சி கைகூடவில்லை என மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (23)

# ஊழியர்கள் இன்மையால் தபாற்சேவை பாதிப்பு!

யாழ்ப்பாணத் தபாலகங்களுக்குப் போதியளவு ஊழியர்கள் இன்மையால் ஒழுங்கான சேவையினை வழங்கமுடியாதுள்ளதாக வடக்கின் பிரதி அஞ்சல்மா அதிபர் தெரிவித்தார்.


யாழ்ப்பாணத்தில் ஏ-9 பாதை திறப்பின் பின்னர், பெருந்தொகையான மக்கள் குடாநாட்டில் மீளக்குடியேறி வருகின்றவேளையில், தபாலகங்களின் சேவை முக்கியமானதாக உள்ளது.

ஆனால், எம்மிடம் போதிய ஆளணி இல்லாமையால், திருப்தியான சேவையை வழங்குவது சிரமமானதாக இருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அண்மையிலே தெரிவான 34 உபதபாலதிபர்களும் இன்னும் ஓரிரு தினங்களில் - வெற்றிடமாகவுள்ள இடங்களில் பொறுப்புக்களை ஏற்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார். (சு)


# கோபுரங்கள் சாய்வதில்லை

“புங்கா சொன்னா ஸ்வெட்லானா செய்வா”



ஒலிம்பிக் தடகள வீரர்கள் ஹிக்கம் எல் குராஜ் (மொனாக்கோ) ஐக்கிய அமெரிக்காவின் ரிம்மொண்ட் கொமரி, மொறிஸ் கிறீன், மரியன் ஜோண்ஸ், நமீபியாவின் பிராஸ்கி பிரெட்கிக்ஸ் ஆகியோர் பேர்மிங்ஹாம் உள்ளகத் தடகளப் போட்டிகளில் கலந்துகொள்ளவில்லை என்பது உண்மையே. ஆனால், பேர்மிங்ஹாம் தடகளப் போட்டிகளின் சிறப்பொன்றும் அதனால் குறைந்துவிடவில்லை. ஏனெனில், அவர்களின் இடத்தை நிரப்ப இன்னும் பலர் வந்துகொண்டிருப்பதை உள்ளகத் தடகளப் போட்டிகளில் காண முடிந்தது.

இதில் குறிப்பிடத்தக்கவர், 4.80 மீற்றர் கோலூன்றிப் பாய்ந்து உலக சாதனை படைத்திருக்கும் ரஷ்யாவின் 22 வயதான ஸ்வெட்லேனா பேபனோவா. ஆனால், கோலூன்றிப் பாய்தலில் **OUT DOOR** உலக சாதனையாகத் திகழ்வது டிரகலியாவின் 4.81 மீற்றராகும். 800 மீற்றர் ஓட்டத்தில் மொசாம்பிக் நாட்டின் மரியாமுட்டோலா தங்கப் பதக்கம் வென்றார். 3000 மீற்றர் ஓட்டப் போட்டியில் எத்தியோப்பியாவின் ஹெய்லி ஜெப்ரலாசி 7 நிமிடம் 40.97 செக்கன்களில் ஓடிமுடித்துள்ளார். இவர் 1997 மற்றும் 1999 இலும் தங்கப்பதக்கங்கள் பெற்றவர். மேலும் 5000 மீற்றர் ஓட்டப்போட்டியில் 1999 இல் உலகசாதனை படைத்தவர். 800 மீற்றர் ஆண்களுக்கான ஓட்டப்பந்தயத்தில் அமெரிக்காவின் டேவிட் குருமணாக்கர் தங்கம் வென்றுள்ளார். இன்னொரு முக்கிய நிகழ்வு- கெந்தி மிதித்துப் பாய்தலாகும். இந்த நிகழ்வில் தனது இறுதிப் பாய்ச்சலில் 17.70 மீற்றர் கடந்து கிறிஸ்ரியன் ஒலசோன் சாதனை படைத்துள்ளார். 60 மீற்றர் ஓட்டத்தைப் பொறுத்தவரை, உக்ரேனின் சண்ணா- புளொக் தங்கப்பதக்கம் வென்றுள்ளார். இவையெல்லாம் பேர்மிங்ஹாம் உள்ளகத் தடகளப் போட்டிகளின் சில முக்கிய மானவர்கள் பற்றி செய்திகள் மட்டுமே. ஆனால், இவர்களினின்றும் மற்றும் எல்லாத் தடகள வீரர்களினதும் எதிர்பார்ப்பு- ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளாகத்தான் இருக்கமுடியும். அந்த நாளில் இந்த முகங்களெல்லாம் பல இலட்சம் ரசிகர்களின் மனதில் பதியப் போகும் முகங்களாகலாம். அதேவேளை - கடந்த சிட்னி ஒலிம்பிக்கில் புகழ்பெற்ற பல வீரர்களின் முகங்கள் எங்கள் மனதில் இருந்து மறைந்தும் போகலாம். இருந்தும் ஒலிம்பிக் போட்டிகளில் அதிகூடிய பதக்கங்கள் பெறுவது ஐக்கிய அமெரிக்காதான் என்பது எழுதாத விதியாக மாறிவிட்டது. ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளிலும் இந்த விதி மாறாது என்பதற்குக் கட்டியம் கூறுவதுபோல இந்த உள்ளகத் தடகளப் போட்டிகளிலும் 17 தங்கம் உட்பட 30 பதக்கங்கள் பெற்றிருக்கிறது அமெரிக்கா. இரண்டாவது இடம்- ஐந்து தங்கங்கள் உட்பட 12 பதக்கங்களைப் பெற்ற ரஷ்யா. கணக்குச் சரியாகத்தான் இருக்கிறது.



கிறிஸ்ரீன் ஆல்சன்
“முப்பாய்ச்சல் ஏதென்ஸ் வரை”



“எத்தியோப்பியா வரை ஓடுவேன். முடியுமா?”
ஜெப்ரலாசி.



“மரியன் ஜோன்ஸ்சைச் சந்திக்கனும்”

## விளையாட்டு அரங்கம்

- நர்மதா

# இது இங்கிலாந்தின் திருவிழா

**2004** ஏதென்ஸ் ஒலிம்பிக்போட்டிகள் அண்மித்துக்கொண்டிருக்கும் இவ்வேளையில், தடகளப் போட்டிகள் பற்றிய செய்திகள் மெதுமெதுவாக முன்னால் வந்து கொண்டிருக்கின்றன. இவ்வகையில் நீண்டதூர ஓட்டப் போட்டிகள் என்றும் கவனத்தைக் கவர்வன. மிகுந்த ஆற்றல் வேண்டப்படும் இப்போட்டிகளில், மிகவும் பிரசித்தமாகக் கருதப்படுவது இன்று லண்டனில் நடைபெறவிருக்கும் **FLORA LONDON** மரதன் ஓட்டப் போட்டிகளாகும். லண்டன் மாநகரின் வீதிகளின் ஊடாக நடைபெறவிருக்கும் இப்போட்டியின் தூரம் 26.2 மைல்களாகும். இப்போட்டியில் கலந்துகொள்ள உத்தேசித்திருக்கும் போட்டியாளர்கள் தொகை 33,000. கிரீன் விச்சில் ஆரம்பிக்கும் இவ்வோட்டம், மால் வரை நடைபெறும். இந்தப் போட்டிகளில் பங்குகொள்வோர் பலரகம். உலகத்தரம் வாய்ந்த நெடுந்தூர ஓட்டவீரர்கள்- வினோத ஆடைகள் அணிந்து தன்னார்வத் தொண்டர்கள், சிறுவர்கள், சிறுமியர்கள், வலது குறைந்தவர்கள் என்று வகைப்படுத்திக்கொண்டே போகலாம்.

1981 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த லண்டன் மரதன் ஓட்டப்போட்டிகளில் கலந்துகொண்டு நிகழ்வை நிறைவு செய்தவர்கள் 508,340 பேர். இவ்வருடம் விண்ணப்பித்துள்ளோர் முப்பத்து மூவாயிரம் பேர். மொத்தப் பரிசு மழை 55,000 அமெரிக்க டொலர்கள். கடந்த வருடம் ஆண்கள் பிரிவில் வெற்றி பெற்றவர்- ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த காலிட் கனூச்சி. இவர் எடுத்துக் கொண்ட நேரம் 2 மணி 5 நிமிடம் 38 செக்கன். பெண்கள் பிரிவில் முதலிடம் பெற்றவர்- இங்கிலாந்தைச் சேர்ந்த பவுலா றட்கிலிப். இவர் எடுத்துக்கொண்ட நேரம் 2 மணி 18 நிமிடம் 56 செக்கன். இவர் இம்முறையும் பங்குபற்றுகின்றார். ஆனால், காலிட் கனூச்சி. இம்முறை பங்குகொள்ள இயலவில்லை என்று அறிவித்துள்ளார். இதேவேளை, இம்முறை கென்யாவின் - போல் டேர்கட் அவதானிக்கப்படும் முக்கிய நபர். இன்னொருவர்- ஒலிம்பிக் மற்றும் உலக சம்பியன் கெசாக்னே அபேரா. இதேவேளை, பெண்கள் பிரிவில் பவுலாவிற்குப் போட்டியாக அமையப்போகிறவர் கென்யாவைச் சேர்ந்த கத்தரின் என்டெரெபா மற்றும் எத்தியோப்பியாவின் டெராட்டு டூலு ஆகிய இரு பெண்மணிகளுமாவர். இவர்கள் எல்லோரும் மிகவும் அவ்தானமாகத் தடகள ரசிகர்களால் அவதானித்து வைக்கப்பட வேண்டியவர்கள். ஏனெனில், அடுத்தவருடம் ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் நிச்சயம் இவர்களைச் சந்திக்கப்போகின்றோம்.

- சரண்யன்.







# காசேதான் கடவுளடா

உலகக்கிண்ணப் போட்டிகளின் முடிவில் ICC இலங்கைக் கிரிக்கெட் சபைக்கு பெருந்தொகைப் பணத்தைக் கொடுக்கும். இது எட்டில் இருந்து ஒன்பது மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரையில் இருக்கும். ஆனால், மறுபுறம் இன்னொரு பிரச்சினையை இலங்கை கிரிக்கெட் சபை எதிர்கொண்டுள்ளது. ஏறத்தாழ ஐந்து மில்லியன் அமெரிக்க டொலர்களை நட்டஈடாக ICCஇற்கு இலங்கை கிரிக்கெட் சபை செலுத்தவேண்டியதாக உள்ளது. உண்மையில இந்த நட்டஈட்டுத் தொகையை இலங்கை கிரிக்கெட்சபை கொடுப்பதற்குக் காரணமாக அமைந்தவர்கள் இலங்கை அணியின் கிரிக்கெட் வீரர்கள் தான். இவர்களின் விளையாட்டு மற்றும் விளம்பர ஒப்பந்தங்களின் மீதான முடிவுகளுக்கும் ICCஇன் நிபந்தனைகளுக்கும் இடையே குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் ஒரு சமரசத் தீர்வு எட்டப்பட முடியாமற் போனமையே இந்த நட்டஈட்டுத் தொகையைச் செலுத்தவேண்டி ஏற்பட்டதற்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

இது ஒருபுறம் இருக்க, உலகக்கிண்ணப் போட்டிகள்- கிரிக்கெட் வீரர்களுக்குப் பணத்தை மழையாகப் பொழிந்தது. வென்றாலும் பணம், தோற்றாலும் பணம். இந்தவகையில் 2,35,000 அமெரிக்க டொலர்களை அணி வீரர்கள் பெற்றுக்கொள்வார்கள்.

இதைவிடவும், இன்னும் கனிசமான தொகைப் பணம் BCCSLஇன் ஒப்பந்தத்தின் பிரகாரமும் (பல மில்லியன் அமெரிக்க டொலர்கள்). அத்தோடு, கிரிக்கெட் சுற்றுப்பயணங்களுக்காக வழங்கப்படும் பெருந்தொகைப் பணம் என்றவாறு கிரிக்கெட் வீரர்களின் உழைப்பு லட்சோபலட்சமாகப் பெருகுகின்றது.

இப்பொழுதுள்ள கேள்வி இதுதான்- விமர்சகர்கள், விடயமறிந்தோர் மிகக்காட்டமாகக் கேட்கும் கேள்வியும் இதுதான். அதாவது, இலங்கை கிரிக்கெட் சபை ICCஇற்குத் தாரை வார்க்கப் போகும் 500,000 அமெரிக்க டொலர்களுக்கான முழுவகை கூறலையும் ஏற்றுக்கொள்ள வேண்டியவர்கள் இலங்கை அணியின் வீரர்கள் என்பதே அது. ஏனெனில், இவர்களின் சுயநலத்தால்தான் இந்த நிலை ஏற்பட்டது. இந்த ஐந்து லட்சம் அமெரிக்க டொலர் வீணாகாமல் இருந்தால், இலங்கையின் கிரிக்கெட் கழகங்களின் வளர்ச்சிக்கும், வீரர்களின் எழுச்சிக்கும் வழிவகுக்க இது உதவியிருக்கும். ஆனால், இன்று நிலைமை என்ன? இன்று வீரர்கள் மொத்தம் பகிர்ந்து கொள்ளப் போகும் தொகை 765,000 அமெரிக்க டொலர்கள். எனவே, நட்டத்துக்கான பொறுப்பை கிரிக்கெட் சபை யார்யாரிடம் வசூலிக்கவேண்டும் என்றொரு வினா எழுகின்றது.

அப்படியாயின் இலங்கையைப் போன்ற வளர்ந்து வரும் நாடுகளுக்கேயுரிய பல்வேறு பிரச்சினைகள், சிறப்பாகப் பொருளாதாரப் பிரச்சினைகலுள்ள நாட்டில் கிரிக்கெட் என்றொரு ஆட்டம் தேவைதானா?

என்றொரு வினா எழுவது தவிர்க்க முடியாதது. ஒன்றைக் கூறமுடியும். கிரிக்கெட் இன்னொரு உயர் குழாத்துக்குரிய விளையாட்டு மட்டுமே. அவர்களின் உலகம் வேறு. ஆனால், அதற்கப்பால் மில்லியன் கணக்கில் மக்கள் குறைந்தபட்சத் தேவைகளைக்கூட பூர்த்திசெய்து கொள்ள முடியாத அவல வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கிரிக்கெட் வீரர்கள் மில்லியன் கணக்கில் பணத்தை டொலர்களில் எண்ணுகிறார்கள். நாங்கள், மில்லியன் கணககில் அதிகரித்துவரும் மக்கள் தொகையை எண்ணுகிறோம். மீண்டும் ஒருகேள்வி- இலங்கையைப் போன்றதொரு நாட்டுக்குக் கிரிக்கெட் தேவையா?

-மன்னவன்.



சிம்பாப்வேயிடம் தோற்றா என்ன?
நல்ல சம்பளம் வருதே பத்தாதா?

# தப்ப முடியாது

புதிய Slow over Rates penalties தற்போது நடைபெறும் சார்ஜா போட்டிகளுடன் அறிமுகமாகின்றன. இது மிகவும் கடுமையானதாக இருக்கும் என்பது வெளிப்படையாகவே தெரிகின்றது. ஒவ்வொரு அணியும் தமது ஐம்பது ஓவரையும் போட்டுமுடிக்க மூன்றரை மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஆட்ட மத்தியஸ்தர் அவசியம் கருதி ஒதுக்கும் நேரத்தையும், அவர்கள் தமது ஐம்பது ஓவர்களையும் போட்டுமுடிக்கப் பயன்படுத்தலாம். ஆனால், இனிமேல் இழக்கப்படும் ஓவருக்கு குறிப்பிட்ட அணியினர், தம் ஆட்ட ஊதியத்தின் ஐந்து வீதத்தை இழப்பர். அதிலும் அணித் தலைவர்- அதில் இருமடங்கு தண்டம் செலுத்தவேண்டியிருக்கும். இரண்டு ஓவர்களுக்குமேல் போட்டுமுடிக்க இயலாமற் போனால், வேண்டுமென்று நேரம் போக்கடித்ததாக அவர்கள் மீது குற்றச்சாட்டு பாரப்படுத்தப்படும். அதுவும் விசாரணை மற்றும் ஐம்பது வீதம் முதல் நூறு வீதம்வரை தண்டப்பணம் கட்டவேண்டும். சிலவேளை இரண்டு ஆட்டங்களுக்குத் தடைவிதிக்கவும் கூடும். இதெல்லாம் அணித்தலைவருக்குத் தனது எதிர்வரும் காலத்தில் டெஸ்ட் போட்டிகளிலும் இந்தமுறைகள் பின்பற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பாதுகாப்புக் காரணங்களைக் கருத்திற்கொண்டு ஆட்ட மத்தியஸ்தர்- ஆட்டத்தை நிறுத்தவும்கூட அதிகாரம் பெற்றவராகிறார்.

# ஏணி தட்டி விழுத்தப்பட்டதா



கார்ல் ஹூப்பர் - தடைகள், தடைகள்

மேற்கு இந்தியத் தீவுகள் அணியின் தலைவர் பதவியில் அமரப்போகிறவர் யார். தொடர்ந்தும் கார்ல் ஹூப்பர் பதவி வகிப்பாரா அல்லது புதியவரா என்று சர்ச்சைகள், பிறைன் லாரா தலைவராக நியமிக்கப்பட்டதும் ஓய்ந்தன. ஆனால், அது நீறுபூத்த நெருப்பு என்பது இப்போதுதான் தெரியவருகிறது. தற்போது கிடைக்கும் செய்திகளின்படி அணித்தலைவர் பதவி கிடைப்பதில் கார்ல் ஹூப்பருக்கு வேண்டுமென்றே தடைகள் போடப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது. இங்கு இரண்டு பிரச்சினைகள் தெளிவாகின்றன. ஒன்று கார்ல் ஹூப்பருக்கு நடந்த கழுத்தறுப்பு. மற்றது வீரர்களால் பெரிதும் நேசிக்கப்படாத லாரா அணித் தலைவராகக் கொண்டுவரப்பட்டிருப்பது. நான் இன்றைககல்ல என்றைக்குமே லாராவின் தலைமையின் கீழ் விளையாடமாட்டேன் என்று கூறியிருக்கிறார் ஹூப்பர். உண்மையில் லாராவின் கிரிக்கெட் வாழ்க்கையில் மற்றவர்களுடன் சுமுகமாகப் பழகும் தன்மை, நட்புறவைப் பேணுதல், தன்னடக்கம் என்பன என்றுமே லாராவிடம் இருக்கவில்லை என்பது எல்லோரும் அறிந்ததே.

தற்போதைய சர்ச்சைகளையும் அந்தப் பின்னணியில்தான் பார்க்கவேண்டும். அதைத் தெரிவாளர்களில் விவியன் றிச்சட்ஸ் தவிர்ந்த கோர்டன் கிரினிட்ஜ் மற்றும் ஜோகரு இருவரும் தனக்கு முதுகில் குத்திவிட்டதாகக் கருதுகிறார் ஹூப்பர். ஹூப்பர் தலைமைப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கு அவரது உடல் நலம் காரணமாகக் காட்டப்பட்ட போதும், அதெல்லாம் வெறும் கட்டுக்கதை என்கிறார் அவர். ஒரு விமர்சகர் கருத்துக்கூறும்போது- லாராவால் என்றைக்குமே அணி வீரர்களின் மதிப்பைப் பெற்றுக் கொள்ள இயலாது. நிறையப் பேர் அணியைவிட்டு விலகுவார்கள் என்றே நினைக்கிறேன். இந்த வரிசையில் ஆரம்பம் ஹூப்பர் என்கிறார் அவர். மேற்கிந்திய அணியின் மீள் ஜனனம் என்று எதிர்பார்க்கப்பட்ட இக்காலகட்டத்தில், சர்ச்சைகள் புதிது புதிதாகக் கிளம்பிக்கொண்டிருக்கின்றன. இந்தநிலையில்தான், அவுஸ்திரேலிய அணி- மேற்கிந்தியத்தீவு போய்க் கால் பதித்துள்ளது. இறுதிச்சுற்றுப் போட்டியில் 2-2 என்று மேற்கிந்தியத்தீவுகளில், அவுஸ்திரேலியாவால் சமன்செய்துகொள்ள மட்டுமே முடிந்திருந்தது. எனவே அந்தக் கணக்கையும் தீர்க்க வேண்டியநிலை அவுஸ்திரேலியாவுக்கு உண்டு. இந்நிலையில், லாரா தலைமையில் விளையாடப்போகும் அணி எப்படி இவர்களைச் சமாளிக்கப் போகிறது என்பது பெரியதொரு வினாதான்.

மேலும்- சச்சினைப் போல, லாரா தன் தகைமையை நிரந்தரமாகப் பேணி விளையாடக்கூடிய வீரர் அல்ல. எல்லாமே குழப்பமாகவுள்ள அணியின் இந்தச் சுற்றுப்போட்டிகள் வெற்றிகரமாக அமையுமா என்பது கேள்விக்குறியே. இன்னும் நீண்டகாலம் மேற்கிந்திய அணி தவழத்தான் போகிறது என்பதற்குக் கட்டியங் கூறுவதுபோலவே நிகழ்வுகள் நடைபெறுகின்றன. PAVILION இருந்து கை தட்டுவதும், மைதானத்தில் எல்லோரும் கட்டி அணைத்துக் கொள்வதும் வெறும் சினிமா போலத்தான் தென்படுகின்றது.

-நிர்மலன்.

# யாரை யார் நொந்து கொள்வது

உலகில் மிகக்கூடியளவு வீரர்கள் பங்குகொள்ளும் விளையாட்டு நிகழ்வு எதுவென்று கேட்டால் அது தடகளப்போட்டிகள்தான். தடகளப் போட்டிகளிலுள்ள VARIETY வேறெந்தப் போட்டிகளிலும் இல்லை என்பது எல்லோரும் அறிந்த உண்மை. இருந்தும் ஏனோ அவை உலக விளையாட்டு ரசிகர்களின் கருத்தை வெகுபிரபல்யமாகப் பிரதிபலிக்கவில்லை என்பதும் உண்மை. இருந்தும், அதன் முக்கியத்துவம் என்றும் குறைந்துவிடுவதில்லை. அதற்குச் சிறந்த உதாரணம்- ஒலிம்பிக் போட்டிகளில் அதைவிடவும் மிகுந்த உற்சாகத்துடன் நடைபெறும் தடகளப்போட்டிகள் பல.



தென்னிந்திய தடகளங்கள் ஏனப்பா காயுது.

அதில் எம்மோடு நெருக்கமான உறவு கொண்டது தென்னாசிய விளையாட்டுப் போட்டிகள். இதில் என்ன துயரமென்றால், பல்வேறு காரணங்களால் தென்னாசிய (SAF) தடகளப் போட்டிகள் இழுபட்டுக்கொண்டே செல்வதாகும்.

இறுதியாக நடைபெறுவதாக இருந்த தென்னாசிய தடகளப் போட்டிகள் செப்ரெம்பர் 2001 பதினொன்றில் உலக வர்த்தகமையம் தாக்கப்பட்டதுடன் இந்தப் போட்டிகள் பிற்போடப்பட்டன. இதனைத் தொடர்ந்து 2002 இல் பாகிஸ்தானில் நடந்தேறி இருக்கவேண்டிய போட்டிகள் இந்திய- பாகிஸ்தான் அரசியல் சர்ச்சைகளால் மேலும் இழுபட்டன. இறுதியாக இவ்வருடம் மார்ச் 29 இலிருந்து ஏப்ரல் 7 வரை இஸ்லாமாபாத்தில் நடந்திருக்கவேண்டிய போட்டிகள் ஈராக் யுத்தத்தின் காரணமாக மீண்டும் இழுபட்டுப்போகின்றன. இதிலுள்ள கேள்வி என்னவென்றால், வளைகுடாவில் சார்ஜா கிரிக்கெட் போட்டிகள் நடைபெற முடியுமென்றால், நிரம்பத் தூரத்தில் உள்ள பாகிஸ்தானில் ஏன் இந்தப் போட்டிகளை நடாத்த முடியாமல் இருக்கின்றதென்பதுதான். இதற்குக் காரணம் கூறும் விடயமறிந்தவர்கள்- தென்னாசிய அரசியல் சூழ்நிலை பாகிஸ்தானில் SAF போட்டிகள் நடைபெறுவதற்கு நந்தியாகக் குறுக்கே நிற்கிறது என்பதைச் சூசகமாக எடுத்துக் கூறுகிறார்கள்.

இருந்தாலும், எப்படியாவது SAF- தடகளப்போட்டிகளை நடாத்தி விட வேண்டும் என்று பலதரப்பினரும் முனைப்புடன் செயற்படுவதையும் சுட்டிக்காட்ட வேண்டும். இந்தவகையில் இஸ்லாமாபாத்தில் இப்போட்டிகள் நடைபெறமுடியாவிடில், கொழும்பில் நடாத்தலாம் என்றும், அந்த முடிவு இலங்கைக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

ஆனால், இலங்கையின் தேசிய ஒலிம்பிக்போட்டியின் தலைவர் ஹேமசிறி பெர்ணான்டோ இதனை மறுத்துள்ளார். அவர் கருத்துக் கூறும்போது, இதுபற்றி நாள்கள் அறிவிக்கப்படவில்லை. மேலும் இப்போட்டிகளை நடாத்துவதற்கான அடித்தளக் கட்டுமாணங்களை உடனடியாக ஏற்படுத்தமுடியாது. உயர்தரம் வாய்ந்த இத்தகைய போட்டிகளை நடாத்த குறைந்தது ஒன்றரை வருடகால அவகாசமாவது தேவை என்றிருக்கிறார்.

மேலும்- பாகிஸ்தானின் குரல் தரவல்ல அதிகாரிகள் இப்படிக் கூறியிருப்பார்கள் என்றும் எண்ணமுடியவில்லை. ஏனெனில், பிற்போடப்பட்டாலும், இறுதியில் எவ்வாறாயினும் இஸ்லாமாபாத்தில் போட்டிகளை நடாத்துவதையே அவர்கள் விரும்புவார்கள் என்றும் கூறுகிறார்கள்.

இதேவேளை, SAF போட்டிகளை இன்னும் காத்திரமானதாக்க பாகிஸ்தான் இன்னொரு யோசனையையும் முன்வைத்திருக்கிறது. அதாவது, தென்னாசியப் பிராந்தியத்திற்கு வெளியிலிருந்து பலமிக்க ஒரு நாட்டையும் போட்டிகளில் சேர்த்துக்கொள்வது போட்டிகளின் தரத்தை உயர்த்த உதுவும் என்கிறது பாகிஸ்தான். பாகிஸ்தான்- சீனாவைக் குறிப்பிடுவதிலிருந்து இது மறைமுகமாக இந்தியாவை சீண்டுவதாகவே இருக்கும் என்பதையும் மறுக்கமுடியாது. இது எரிகிற அடுப்பில் எண்ணையை ஊற்றுவதாகவே இருக்கும் என்பது யாரும் ஊகிக்க முடியாததொன்றல்ல.



நேரா ஏதென்ஸ் போக
வேண்டியதுதான்!

ஆனால், இவ்விடயத்தில் இலங்கை தன் நிலைப்பாட்டில் தெளிவாகவுள்ளதுபோலவே தெரிகின்றது. இலங்கை விளையாட்டுத்துறை அதிகாரிகள் இப்படியானதொரு மாற்றத்தை இந்தியாவின் சம்மதத்தையும் பெற்றே, செய்வதுபற்றி யோசிக்க முடியும் என்று கூறியுள்ளார்கள்.

இந்தவகையில், நிறையக் கருத்துப் பரிமாறல்கள் நடைபெறும் சாத்தியங்கள் உள்ளன. ஆனால் மேலோட்டமாக தென்னாசியப் போட்டிகள் பேசப்பட்டாலும், உள்ளார்ந்தமாக அரசியலின் தாக்கம் இதனைப் பெருமளவில் நிர்ணயிக்கும்போலவும் தெரிகிறது. ஏனெனில் தென்னாசிய விளையாட்டுப் போட்டிகள்- அரசியலும், விளையாட்டுக்களும் கலந்ததொரு பரிமாணத்திலேயே தொடரப்போகின்றன.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு ஆசை, ஒவவொரு கொள்கை, தத்தம் நலனுக்கேற்றவாறான கருத்துக்கள், இராஜதந்திரக் கருத்துக்கள். இந்த வகையில் பார்க்கும்போது, தென்னாசிய வீரர்கள் 2004 ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் பங்குகொள்ளும் இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்ளும் நல்லதொரு சந்தர்ப்பம் அவர்களுக்குக் கிடைக்கப்போவதில்லை என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது.

-ஜோசப் கிருஷ்ணா

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## பெருகிவரும் வீதிவிபத்துக்கள்

யாழ். மாவட்டத்தில் போக்குவரத்து ஒழுங்குகளை மீறுவது - மக்களைப் பொறுத்தவரை பாரிய இடைஞ்சல் தரக்கூடிய செயற்பாடாக மாறியிருக்கிறது.

சனநெருக்கடி மிக்க யாழ். நகரப் பகுதியாயினும் சரி- குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் சரி - வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை யாழ். வைத்தியசாலையிலுள்ள பொலிஸ் பிரிவின் புள்ளி விபரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

இந்த வீதி விபத்துக்களுக்கு முக்கிய காரணம் - வீதி ஒழுங்குகளையும், நெறிமுறைகளையும் அலட்சியப்படுத்துவதே எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதி விபத்துக்களில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானவை, ஏ-9 வீதியிலும் நடைபெற்றிருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கதொரு அம்சமாகும்.

ஏ-9 வீதியில், வீதிப்பாதுகாப்புப் பற்றி - முகமாலைக்கு அப்பால் தமிழீழ காவற்துறையினர் மிகவும் இறுக்கமான கண்காணிப்பையும், விதிமுறைகளையும் அமுல்படுத்தியதால் - அப்பகுதிகளில் வீதிவிபத்துக்களைப் பெருமளவில் குறைக்க முடிந்தது.

ஆனால், முகமாலைக்கு இப்பால் உள்வரும் வாகனங்கள் - மீண்டும் 'பேயோட்டத்தை' ஆரம்பிக்க - வீதிவிபத்துப் பிரதேசமாக ஏ-9 தொடர்ந்தும் ஆபத்து மையமாகியிருக்கிறது.

அதீத வேகத்தில் சீறிப்பாயும் வாகனங்கள், கொழும்பு போன்ற தொலைநகரங்களிலிருந்து நீண்ட நேர வாகன ஓட்டத்தினால் களைப்புற்றிருக்கும் சாரதிகள், அவர்களில் சிலரின் 'சுதியோட்டங்கள்' என வாகன விபத்துக்களுக்கான காரணிகள் நீண்டு செல்கின்றன.

அதேவேளை - வாகன ஓட்டிகளை மட்டும் தனித்துக் குறைகூறிவிடவும் முடியாதளவுக்கு - வீதிகளில் சைக்கிள்களில் பயணிப்போரும், பாதசாரிகளும் நடந்து கொள்வதை மறுத்துவிட முடியாது.

வீதியை அடைத்தவாறு சமாந்தரமாகச் செல்லும் சைக்கிளோட்டிகளாலும், வாகனங்கள் வருவது தெரிந்தும் - இதோ கடந்து விடலாம் எனக் கண்மூடித்தனமாக வீதியைக் கடக்கும் பாதசாரிகளாலும் விபத்துக்கள் பல நடந்திருப்பதை / நடைபெற்று வருவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இதேவேளை, ஏ-9 வீதியைத் தவிர்த்து குடா நாட்டின் பல பகுதிகளிலும் சமாந்தரமாகச் செல்லும் சைக்கிளோட்டிகளால் குச்சு ஒழுங்கைகளிலும் கூட விபத்துக்கள் ஏற்படுவதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு வாகனச் சாரதிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளும் அதேவேளை- இத்தகைய சைக்கிளோட்டிகளும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

யாழ்.குடாநாட்டைப் பொறுத்தவரையில் மோட்டார் சைக்கிளோட்டிகளும், ஏனைய வாகனமோட்டிகளும் அலட்சியப்படுத்தும் இன்னுமொரு விடயம் - சமிக்ஞை விளக்குகளையும், முன்விளக்குகளையும் சரிவரப் பயன்படுத்தாமையாகும்.

இரவு நேரங்களில் - வாகனங்களைச் செலுத்துபவர்கள் - எதிரேவரும் வாகனங்களுக்கு ஒளிச் செறிவு குறைந்த விளக்குகள் (டிம் லைட்) மூலம் துணை வழங்குவதைத் தவிர்த்து, அதிசெறிவான முன்விளக்குகளைத் தொடர்ந்தும் எரியவிட்டு, எதிரே வரும் வாகனங்களைத் தடுமாறவைக்கும் கைங்கரியத்தை செய்வது - யாழ். குடாநாட்டில் இன்று சர்வசாதாரண விடயமாகிவிட்டது.

இவை ஒருபுறமிருக்க - பயணிகளை ஏற்றிச்செல்லும் வாகனங்களின் போக்கும் குடாநாட்டு மக்களை பீதிக்குள்ளாக்கி வருகிறது.

குறிப்பாக - மினிபஸ்களில் ஏகத்துக்கும் மக்களை அடைத்துக்கொண்டு, போட்டிபோட்டு ஓடும்போது - பஸ்களில் பயணிப்போர் உயிர்களைத் தமது கைகளில் பிடித்துக்கொண்டு பயணிப்பதாகவே உணர்வது எல்லோருமே அனுபவிக்கும் ஒரு சாகசமாகும். இந்தப் 'போட்டி ஓட்டங்கள்' பல தடவைகளில் விபத்துக்களை வலிய இழுத்து வந்திருக்கின்றன.

குடாநாட்டின் நிலை இப்படியிருக்க - வீதி ஒழுங்கு முறைகளில் விரைவில் தீவிர கவனம் செலுத்தப்போவதாக பொலிஸார் அறிவித்திருக்கின்றனர். காலத்தால் பிந்தியதெனினும் - இந்த நடவடிக்கை எவ்வளவு தூரம், எவ்வளவு காலத்திற்கு செம்மையாகப் பேணப்படும் என்ற சந்தேகம் எழுகின்றது.

எவ்வாறெனினும் - வீதி ஒழுங்குமுறை சரிவரப் பேணப்படுமாயின் அது பாராட்டுக்குரியதாக இருக்கும். அதேவேளை - தேவையற்ற உயிரிழப்புக்களையும், அங்கவீனமடை தலையும் தடுப்பதற்கு தண்டனைகள் மட்டுமல்ல - மக்கள் தாமாக உணர்ந்து செயற்படுவதும் முக்கியமானதாகும்.

பருத்தித்துறையினுள்

# உயர்பாதுகாப்பு வலயப்பகுதிக்குள் தபாலக சேத மதிப்பீட்டுக்குத் தடை

பருத்தித்துறை இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்திருந்த தபால் நிலையத்தின் சேதங்களை மதிப்பீடு செய்யச் சென்ற, அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தின் உயரதிகாரிகளை உட்செல்லப் படையினர் அனுமதிக்காமையால் திரும்பிச் சென்றனர்.

கடந்தகால யுத்த நடவடிக்கையின்போது, சேதமடைந்த தபால் நிலையங்களை மதிப்பீடு செய்வதற்காகக் கொழும்பிலிருந்து அதிகாரிகள் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இவர்கள் நேற்றுக்காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை இராணுவ முகாமினுள் மதிப்பீட்டுப் பணிக்காகச் சென்றவேளை, இவர்களை உட்செல்ல அனுமதிக்க முடியாது எனப்படையினர் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து இவர்கள் இராணு உயரதிகாரிகளுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட போதிலும், இவர் உட்சென்று சேதமதிப்பீடுகளைச் செய்ய அனுமதி மறுக்கப்பட்டது.

அதேவேளை, ஏனைய திணைக்கள அதிகாரிகளும், கட்டடத் திணைக்கள அதிகாரிகளும் முன்பு இந்த உயர் பாதுகாப்பு வலயத்தினுள் சென்று மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (23)

# பல்கலைக்கழகக் கட்டமைப்பு முழுமையாக விரைவில் மாறும்!

## அமைச்சர் கபீர் காசிம் அறிவிப்பு

பல்கலைக்கழகக் கட்டமைப்பு முழுமையாக மாற்றப்படவுள்ளதாக மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் காசிம் தெரிவித்துள்ளார். மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து வருவதைக் கவனத்தில் கொண்டே - பல்கலைக்கழகக் கட்டமைப்புக்களை மீளமைப்புச் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் பல்கலைக்கழகக் கல்விமுறையைத் தொழில்சார் கல்வி முறையாக மாற்றுவதற்கான சட்டம் வந்துள்ளது. வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதற்கான வாய்ப்புக்கள் இப்போது அதிகரித்துள்ளன. இதனால் உள்ளூர் பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது. இந்தநிலையைத் தடுக்க மாற்று வழிமுறையைக் கண்டறியவேண்டும்.

வெளிநாட்டுக் கல்வி முறையை ஒட்டியதாக எமது கல்வி முறைகளையும் நாம் மாற்றியமைக்க வேண்டும். இங்குள்ள கல்வி முறைக்கும், வேலைவாய்ப்புக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகின்றது. இந்தநிலை மாற்றப்பட வேண்டும்.

மொரட்டுவ பல்கலைக்கழகம் தொழில்சார் பட்டதாரிகளை உருவாக்குவதற்கும் அமைச்சர் கபீர் காசிம் பாராட்டுத் தெரிவித்தார்.

# கடற்படைத்தளத்திலிருந்து காணாமற்போன ஆயுதங்கள்!

## அக்குரஸ்ஸ பகுதியிலிருந்து மீட்பு

திருகோணமலை கடற்படைத் தளத்துக் களஞ்சிய அறையிலிருந்து திருடப்பட்ட ரி-56 ரக துப்பாக்கியும், 120 மகசீன்கள் தொடர்பாக - அந்தத்தளத்தில் கடமையாற்றிய படையினர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஒரு மாதத்துக்கு முன்னர் களவுபோன இவ்வாயுதங்கள் அக்குரஸ்ஸ பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து மீட்கப்பட்டன.

இந்த ஆயுதங்கள் பாதாள உலகத்தினருக்கு விற்பதற்காகக் களவாடப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஐ.தே.க. - பொ.ஐ.முவுக்குப் பதிலாக மாற்று வழியை மக்கள் கேட்கின்றனர்

## மகிந்த ராஜபக்ஷவிடம் மல்வத்த மகாநாயக்கர்

மக்கள் இப்போது ஐ.தே.க மற்றும் பொ.ஐ.மு ஆகிய கட்சிகள் குறித்து அதிருப்தி கொண்டிருப்பதாகவும், தமக்கு மாற்று வழியைக் காட்டுமாறு அவர்கள் தன்னைக் கேட்டிருப்பதாகவும் மல்வத்த மகாநாயக்கர் ரம்புக்வெல விபஸி தேரர், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் விசனம் தெரிவித்துள்ளார்.

அரசியற்கட்சிகள் அதிகாரத்தை மையப்படுத்தி இயங்குவதால், மக்கள் அவர்கள் மீது வெறுப்புற்றுள்ளனர். பொ.ஐ.முவோ, ஐ.தே.கவோ திருப்திகரமாகச் செயற்படவில்லை எனத் தெரிவித்த மல்வத்த மகாநாயக்கர்,

பண்டாரநாயக்காவின் கொள்கையைச் சுதந்திரக்கடசி மீளமைத்துக்கொண்டு செல்லவேண்டும் என்றும், அதற்கேற்ப கட்சியைக் கட்டியமைக்கவேண்டும் என்றும் மகிந்த ராஜபக்ஷவிடம் கேட்டுள்ளார்.

# புனர்வாழ்வு-புனரமைப்பு நிதியத்திற்கு முதல் நிதியுதவி நோர்வே அளித்தது!

வட-கிழக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு நிதியத்துக்கு முதன்முறையாக 2.7 மில்லியன் அமெரிக்க டொலரை நோர்வே அரசாங்கம் உதவியாக வழங்கியுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் வட-கிழக்குப் பகுதிகளைப் புனரமைப்புச் செய்வதற்காக உலக வங்கியின் வழிகாட்டலில் செயற்படும் வகையில் வட-கிழக்குப் புனரமைப்பு நிதியம் கடந்த பெப்ரவரியில் அமைக்கப்பட்டது.

இந்த நிதியத்துக்கு முதலாவது உதவியாக நோர்வே அரசு 2.7 மில்லியன் டொலரை வழங்கியுள்ளது. இலங்கைக்கு நோர்வே வழங்க உறுதியளித்திருந்த 16.5 மில்லியன் டொலரை நீண்டகால நிதியுதவிக்குப் புறம்பாகவே இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த உதவி குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன்-அரசுதரப்பும், புலிகளும் போரினால் சீரழிந்துள்ள நாட்டில் அமைதியைக் கட்டியெழுப்புவதற்குரிய நிலையைத் தோற்றுவிப்பதற்கான அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும். அதன் அடிப்படையிலேயே உதவிகள் வழங்கப்படும்.

இந்த உதவி - மீள்குடியமர்வு, குடிநீர் வசதி, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளுக்குப் பயன்படுத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அபிவிருத்தித்திட்டப் பணிகளுக்கு ஏழு கோடி ரூபா நன்கொடை!

இலங்கையில் அபிவிருத்திப் பணிகளுக்குத் திட்டமிடுவதற்கென ஐக்கியநாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 7 கோடி ரூபாவை உதவியாக வழங்குகிறது.

யுத்தத்தினால் அழிந்துபோயுள்ள வடக்கு-கிழக்குப் பகுதிகளை சீர்செய்யவும், நாட்டின் ஏனைய பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் புனரமைப்புச் செய்யவும் இந்த நிதி வழங்கப்படுகின்றது.

பிரிட்டன், கனடா, யு.என்.டி.பி என்பன இந்த உதவித் தொகையை வழங்கின. இதற்கான உடன்படிக்கையில் பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன், யு.என்.டி.பியின் வதிவிடப் பிரதிநிதி ஆகியோர் நேற்றுக்காலை கைச்சாத்திட்டனர்.

இரு தசாப்தங்களாக ஸ்தம்பிதநிலையிலுள்ள வடக்கு-கிழக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் சென்று, சமாதான வழிமுறைகளில் முன்னேற்றம் காண்பது அவசியம் என்று பிரதம மந்திரியின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பாகிஸ்தான் படையதிகாரிகள் 14 பேர் கொழும்புக்கு விஜயம்!

பாகிஸ்தான் உயர் இராணுவ அதிகாரிகளைக்கொண்ட குழுவொன்று கொழும்பு வந்துள்ளது. பாகிஸ்தான் தேசிய பாதுகாப்புக் கல்லூரியைச் சேர்ந்த 14 இராணுவ அதிகாரிகள் இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இந்தக் குழுவினரை பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, மற்றும் முப்படைகளின் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தி வருகின்றனர்.

மேஜர் ஜெனரல் முகமட் சித்திக் தலைமையிலான இந்தக் குழுவில்- இரண்டு பிரிகேடியர்களும், நான்கு லெப்டினன்ட் கேணல்களும் மற்றும் கடற்படை, விமானப்படை அதிகாரிகளும் இடம்பெற்றுள்ளனர்.

பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருடனான சந்திப்புக்களின்போது, இரு தரப்பு இராணுவ விவகாரங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரியவருகின்றது.


# இந்திய ஆதரவைத் தேடும் ஜனாதிபதி; நிதியை திரட்ட முனைப்பாகும் ரணில்!

ஈராக் மீது அமெரிக்கா நடத்தி வரும் தாக்குதல்கள் காரணமாக, இலங்கையின் அரசியல் நிலைமையை இலங்கையர்களே பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஈராக் மீதான தாக்குதலைச் சுட்டிக் காட்டியே இலங்கையின் பொருளாதாரத்தை நடத்திக் கொண்டு செல்லலாம் என்ற நிலைப்பாடு அரசாங்க மட்டத்தில் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, ஈராக் மீதான தாக்குதல் ஆரம்பமான வேளையில், உண்மையில் உலக சந்தையில் எரிபொருட்களின் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டது. ஆனால், இலங்கையில் அந்தத் தாககுதலைக் காரணம் காட்டி எரிபொருட்களின் விலைகள் உயர்த்தப்பட்டன.

தேயிலை ஏற்றுமதியைப் பொறுத்தவரையில், ஈராக்கே இலங்கையின் பிரதான இறக்குமதி நாடாக இருந்து வந்தது. எனினும், அந்த நாட்டின் மீது மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பின் பின்னர் கொழும்பு, தேயிலை ஏல விற்பனையில் பாரிய வீழ்ச்சி நிலை காணப்பட்டது. என்றும் இல்லாதவாறு மில்லியன் கணக்கான கிலோ தேயிலையை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனைக் கருத்திற் கொண்டு தேயிலைத் தோட்ட நிறுவனங்கள் தமது தோட்டத் தொழிலாளர்களின் வேலை நாட்களைக் குறைக்க முயற்சித்ததுடன், மாதாந்த கொடுப்பனவுகளையும் உரிய திகதியில் கொடுக்கப் பின்னடித்து வந்தன. தேயிலை ஏல விற்பனை நிலவரம் தற்சமயம் சீராகியுள்ள நிலையில், தேயிலை நிறுவனங்களின் அநீதிப் போக்கு தொடரவே செய்கிறது. மறுபுறத்தில் ஈராக்கைச் சுட்டிநிற்கும் அரசியல் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அமெரிக்காவை கண்டிப்பதுமில்லை. ஆனால், ஈராக் மீதான தாக்குதலை எதிர்க்கவும் வேண்டும் என்ற நிலையில், ஆளும் ஐக்கிய தேசியக் கட்சி தமது நகர்வை முன்கொண்டு செல்கின்றது. அவ்வப்போது இடம் பெறும் பேரணிகளை, அமெரிக்கத் தூதரகத்திற்கு இலக்கு வைத்துச் சென்று விடக்கூடாது என்பதில் அரசாங்கம் கவனமாக இருந்து வருகின்றது.

அதேநேரம், ஈராக் மீதான தாக்குதல்களில் பொதுமக்களும் கொல்லப்பட்டு வருவதைக்கூட இலங்கை அரசாங்கம் கண்டிக்காமல் இருந்து வருவதுதான் புதுமை. அதனை அரசாங்க அமைச்சர்களாக இருக்கும் முஸ்லிம்கள்கூட இந்தச் செயல்களைக் கண்டிக்காமை, உண்மையில் அவர்கள் அரசியல்தான் செய்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டியிருக்கிறது. முன்னர் பலஸ்தீன மக்களுக்கு ஆதரவாக நடத்தப்படும் பேரணிகள் மற்றும் எதிர்ப்புக் கூட்டங்களில் அரசாங்கத்தின் முஸ்லிம் அமைச்சர்கள் பெயருக்காக பங்குகொள்வது வழமை. ஆனால், அதுகூட ஈராக் மீதான தாக்குதலின்போது நடக்காமை வேடிக்கையான விடயம்தான். முஸ்லிம் மக்கள் தற்சமயம் தமது தலைவர்கள் குறித்து உண்மை நிலவரங்களை அறிந்து கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை ஈராக்கிய யுத்தம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். ஈராக்கிய யுத்தத்தைத் தமக்குச் சாதகமாக உள்நாட்டு அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்வதில் எதிர்க் கட்சிகள் வெற்றி கண்டிருக்கின்றன. ஜனாதிபதி முதல் சிறிய கட்டமைப்பைக் கொண்டுள்ள முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணியினர் வரை இந்த விடயத்தில் தமது எதிர்ப்பு நிலையை வெளிக் காட்டி வருகின்றனர்.

ஜனாதிபதியைப் பொறுத்தவரையில ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலுக்குத் தமது எதிர்ப்பை வெளிக்காட்டியிருப்பது, இலங்கை முஸ்லிம் மக்கள் மத்தியில் அவருக்கான வரவேற்பை அதிகரித்துள்ளது. முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி பெரிதும் வெளிச்சத்துக்கு வராத கட்சியாக இருந்த போதும், இன்று இலங்கைப் புலனாய்வு சேவையில் இனங்காணப்படும் அளவிற்குப் பிரசித்தி பெற்றிருக்கிறது. ஏற்கனவே இந்தக்கட்சி மலையகத்தில் முஸ்லிம்கள் சிங்களவர்களால் தாக்கப்பட்டவேளையில் - கொழும்பில் ஆர்ப்பாட்டங்களை ஒழுங்கு செய்த கட்சியாகும். அன்றிலிருந்து இந்த கட்சியை முஸ்லிம்களின் ஆர்ப்பாட்டம் தொடர்பில் புலனாய்வுச்சேவையினர் முதற்தரத்தில் வைத்துத் தகவல்களைத் திரட்டி வருகின்றனர்.



## தெற்குத் திசையினிலே

### கொழும்பிலிருந்து இந்திரஜித்

தென்னிலங்கை அரசியல் நகர்வில் மலையகமும் தற்சமயம் முக்கிய இடத்தைப் பெறும் வாய்ப்பை அடைந்துள்ளது. தோட்டத் தொழிலாளர்களை மையமாகக் கொண்ட தொழிற்சங்கங்கள்- தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் எச்சரிக்கையை முன்வைத்துள்ளன. இதற்குப் பிரதான காரணமாகத் தோட்ட நிறுவனங்களின் ஒப்பந்த மீறல் எனக் கூறப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஆறு வருடங்களுக்கு முன்னர், 50 வருடகாலக் குத்தகை அடிப்படையில் பெருந் தோட்டங்கள் தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன. அன்று முதல் அந்த பெருந்தோட்டங்கள் நட்டத்தில் இயங்கி வருவதாகக் கூறி வரும் தோட்டங்களைக் குத்தகைக்குப் பெற்ற தனியார் நிறுவனங்கள், அதனைக் காரணம் காட்டி தொழிலாளர்களுக்குச் சம்பள உயர்வுகளைக் கொடுக்காது, அதேநேரம் சிலசலுகைகளையும் மறுத்து வருகின்றன. இதனால் நாள்தோறும் ஏதோ ஒரு தோட்டத்தில் பணிப் புறக்கணிப்பு அல்லது போராட்டம் என ஏதேனும் பிரச்சினைகள் இடம் பெற்று வருகின்றன.

நாட்டின் வாழ்க்கைச் செலவு அதிகரித்துச் செல்லும் நிலையில், தோட்டத் தொழிலாளர்களின் வேதனங்கள் ஒரு ரூபாவாலும், இரண்டு ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. நிலைமை இவ்வாறிருக்க, நட்டங்களைக் கூறி வந்த தோட்டத் தொழிற்துறை தனியார் நிறுவனங்கள், முன்னர் அரசாங்கத்துடனும் தொழிற்சங்கங்களுடனும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறி தம் வசம் இருக்கும் தோட்டங்களை வேறு தனியார் துறையினருக்குக் குத்தகைக்குக் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

முதற்கட்டமாக இரண்டு முன்னணி தனியார் தோட்ட நிறுவனங்கள் இந்தச் செயலை மேற் கொண்டுள்ளன. இந்த விடயம் வெளியே கசிந்த வேளையில், அதனை சமாளிப்பதற்காகத் தற்போதைய 50 வருடக் குத்தகையை 99 வருடங்களாக அதிகரித்துத் தருமாறு அந்தத் தோட்ட நிறுவனங்கள் அரசாங்கத்திடமும், தோட்டத் தொழிறசங்கங்களிடமும் கோரியுள்ளன. இதற்குத் தொழிற்சங்கங்கள் மத்தியில் இருந்து கடும் எதிர்ப்புகள் எழுந்துள்ளன. விடயம் ஜனாதிபதிக்கும், பிரதம மந்திரிக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. தோட்ட நிறுவனங்கள் தமக்கு நட்டம் எனத் தெரிந்தால், தோட்டங்களைத் தொழிலாளர்களுக்குப் பிரித்துக் கொடுத்து அவர்களைச் சிறுதோட்ட உரிமையாளர்களாக்க வேண்டும் என்ற கோரிக்கை தொழிற்சங்கங்களால் முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனால், தொடரும் பேரம்பேசலில் தோட்ட நிறுவனங்களின் 99 வருடக் குத்தகைச் சேர்க்கையே வெற்றிபெறும் நிலை காணப்படுகின்றது. வழமை போலவே தோட்டத் தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களை மீண்டும் ஒரு முறை ஏமாற்றப் போகின்றன. அதற்குள் இந்த விடயத்தைப் பெரிதாக்கி, தமது அரசியல் ஸ்திரத்தன்மையை வளர்த்துக் கொள்ளப் போகின்றன. இதுவே உண்மை.

பிரதான கட்சிகளுக்குள்ளும், சிறிய கட்சிக்குள்ளும் பிரச்சினைகள், முறுகல்கள் அன்றாடம் ஏற்பட்டு வருகின்றன. இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைமை மோசமாகியே வருகிறது. ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்குள் இடமில்லை என்ற நிலையில், அதாவுல்லா அணி தற்சமயம் அஷ்ரப் காங்கிரஸ் என்ற பெயரில் அமைப்பாக இயங்கி வருகின்றது. என்றாலும் இரண்டு பிரிவுமே ஆளும் கட்சியில் அங்கம் பெற்றிருப்பதால், அதிகாரப் போட்டிகள் தலைதூக்கியுள்ளன.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் 12 வருடங்களாகப் புத்தளம் உள்ளிட்ட பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களுக்குப் பெரும்பாலும் நிவாரணங்கள் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு ஒவ்வொரு காலப்பகுதியிலும் சுமத்தப்பட்டே வந்திருக்கிறது. எனினும், அந்த வேளைகளில் முஸ்லிம் காங்கிரஸின் செயற்பாடுகள் திருப்தியாக அமையவில்லை என்று குற்றச்சாட்டுகள் எழுப்பப்பட்டு வந்தன. தற்சமயம் அதனையும் மீறி நிவாரணம் வழங்குவதில் பிரிந்து செயற்படும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இரு பிரிவுகளுக்கும் இடையில், முறுகல் மோதலாக மாறியிருக்கிறது.

அமைச்சர் ஜயலத் ஜயவர்த்தனவின் ஏற்பாட்டில் வன்னி மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன், நிவாரணம் பெறுவோருக்கான நடமாடும் சேவை ஒன்றை ஒழுங்கு செய்திருப்பதாகச் செய்தியை வெளியிட்டு வந்தார். மறுபுறத்தில், அஷ்ரப் காங்கிரஸின் அமைச்சர் நூர்தீன் மசூர் தாமே இதனை ஒழுங்கு செய்ததாகத் தகவல் வழங்கி வந்தார். முறுகல் தொடர்ந்த அதேநேரம், சம்பந்தப்பட்ட நிவாரண இடம்பெயர் சேவைத் திகதியும் கடந்த வியாழக் கிழமை வந்தது. சுமார் 5000 இடம் பெயர்ந்த மக்கள் இந்த சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக வந்திருந்தனர்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் மலர் மாலையுடன் முகாம் வாசலில் காத்திருந்தார். அமைச்சர் ஜெயலத் சரியாக வாகனத்தில் 9.30 க்கு வந்திறங்க, ரிசாத் பதியுதீன் மலர் மாலையை அணிவிக்கத் தயாரானார் - அப்போது நூர்தீன் மசூரின் தலைமையிலான சுமார் 500 பேர் வரை கோஷமெழுப்பியபடி வந்தனர். வந்தவர்கள், ரிசாத் பதியுதீனைத் தாக்கமுற்பட்ட வேளையில் அவர் அமைச்சர் ஜெயலத் ஜயவர்த்தனவைக் கட்டிப்பிடித்துக் கொண்டார்.

இந்தப்பிடி இருவருக்குமே சமாளிக்க முடியாமையால் இருவரும் கீழே வீழ்ந்துவிட்டனர். இதன்போது, தாக்குதல் உத்தியாக இருதரப்பும் மண்ணை வாரி ஒருவருக்கு ஒருவர் வீசிக்கொண்டனர். அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினரும் மோதலில் ஈடுபட்டுக் கொண்டிருக்க என்ன செய்வதென தெரியாத அவர்களின மெய்ப்பாதுகாவலர்கள் வான் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இது இடம்பெற்றுக் கொண்டிருக்கும்போதே -முகாமுக்குள் சென்ற நூர்தீன் மசூர், தாம் நடமாடும் சேவையை நடத்தப் போவதாகவும், அதனை யாரும் தடுக்க முடியாதெனவும் கூறி ஆசனத்தில் அமர்ந்து கொண்டார். நிலைமையைச் சமாளிக்க முடியாதுபோன பொலிஸ் அதிகாரிகள் நடமாடும் சேவை இடைநிறுத்தப்படுவதாக அறிவித்தனர். இது இவ்வாறிருக்க, இந்தச் சேவையை நடத்த உத்தரவிட்ட அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன, தாம் ரிசாத பதீயுதீனை முகாம் ஏற்பாடுகளைச் செய்யச் சொன்னதாகவும் அழைப்பீல்லாமலேயே அமைச்சர் நூர்தீன் மசூர் வந்துவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

விடயம் தற்சமயம் பிரதமமந்திரியிடம் சென்றிருக்கிறது. பிரதமர் உரிய தகவல்களைத் தருமாறு அனைத்துத் தரப்பினரையும் கேட்டுள்ளார். ஏற்கனவே தமது கட்சிக்குள் பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் பிரதம மந்திரிக்கு இது மற்றுமொரு தலையிடியைக் கொடுததிருக்கிறது. நாடாளுமன்ற உறுப்பினர் ஹோலித்த பிரேமரத்ன, மற்றும் தென்பகுதி அபிவிருத்தி அமைச்சர் வஜிர அபேவர்த்தன ஆகி யோர் முறையே பொலிஸ் நிலையத்துக்குள் அதிகாரத்தைப் பயன்படுத்திக் குற்றம் சுமத்தப்பட்ட ஒருவரை விடுவித்தமை, மற்றும் துஷ்பிரயோகம் போன்ற குற்றச் சாட்டுக்கு உள்ளாகியுள்ளனர். இது தற்சமயம் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கை வரை சென்றிருக்கிறது.

இதற்கிடையில், புத்தளத்தில் இடம்பெற்ற பிரச்சினை தமது ஆட்சி ஆசனங்களிலேயே கை வைத்து விடுமோ? என்ற அச்சம் பிரதமமந்திரிக்கு ஏற்பட்டுள்ளது. பிரச்சினையைத் சமரசமாகத் தீர்க்க வேண்டிய கட்டத்திலேயே பிரதமர் தற்போது இருக்கிறார். ஏனெனில், தீர்ப்புக் கூறப்போனால் ஏதோ ஒரு தரப்பின் எதிர்ப்புத் தமது ஆட்சிக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும் என்பது பிரதமமந்திரிக்கு நன்றாகவே தெரிந்த விடயமாகும்.

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம், நாட்டின் அபிவிருத்திக்கு வழிதேடும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் பெருந்தொகை நிதியுதவியை ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் எதிர்பார்க்கிறது. அதன் பின்னணியில் அமெரிக்காவில் நடைபெறும் முன்னோடி மாநாட்டில் இந்தியாவை பங்கேற்க வைப்பதிலும் அது வெற்றிகண்டுள்ளது. அரசியலமைப்புக்கு மாறாக ஜூன் மாதத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தப்போவதாக கூறி ஜனாதிபதியினதும் தமிழீழ விடுதலைப் புலிகளினதும் எதிர்ப்புக்களைப் பெற்றுக்கொண்ட ரணிலின் அரசாங்கம், அடுத்த கட்ட நகர்வை எடுத்து வைத்திருக்கிறது. ரோக்கியோவில் கிடைக்கும் நிதியைக் கொண்டு அபிவிருத்தியை மேற்கொண்டால், ஜனாதிபதியினால் தம்மை அசைக்க முடியாது என்ற நம்பிக்கை ரணிலுக்கு இருக்கிறது. அதனடிப்படையிலேயே, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு இந்தியா ஆதரவு வழங்கி விடுமோ என அச்சம் கொண்டிருந்த அவர், அமெரிக்க முன்னோடி நிதி வழங்கும் மாநாட்டில் இந்தியாவைப் பங்கு கொள்ளச் செய்வதன் மூலம்- இந்தியா, ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவளிக்கிறது என்ற தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையில் மாற்று அரசாங்கத்தை அமைக்கப் போவதாகக் கூறிவரும் ஜனாதிபதி கடந்த வாரத்தில் மேற்கொண்ட இந்திய விஜயம் இலங்கை அரசியலில் சற்று எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியிருக்கிறது. நடைமுறை சமாதான முன்னெடுப்புகள், இலங்கையின் இறைமைக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் இருக்கின்றன. நோர்வே ஏற்பாட்டாளர் உள்நாட்டு விவகாரத்திலும் தலையிடுகிறார். எனவே இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் இந்தியா மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என ஏற்கனவே ஜனாதிபதி கூறி வந்தும், தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வில் தாம் தலையிடுவது பொருத்தமில்லை. எனினும், தீர்வு முனைப்புக்குத் தாம் ஆதரவென இந்தியா கூறியுள்ளபோதும், ஜனாதிபதி இந்தியாவை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்துக்கு எதிராகச் சில முடிவுகளை எடுப்பதற்கு ஜனாதிபதி திட்டமிட்டு வருகிறார். அதில் ஒன்றுதான் ஊடகத்துறை அமைச்சைப் பொறுப்பேற்பது. அது இந்தமாதம் 17 ஆம் திகதி நிகழவிருப்பதாகவே கதைக்கப்படுகிறது. ஆனால், ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் பிரதம மந்திரியுடன் முரண்பட்டுள்ள இன்றைய நிலையில் ஊடகத்துறை தொடர்பாக எச்சரிக்கை ஒன்றை மட்டுமே ஜனாதிபதி விடுப்பார் எனத் தகவலொன்று கூறுகிறது. மக்கள் விடுதலைமுன்னணியுடன் இணைந்து மாற்று அரசாங்கம் ஒன்றைத் தேர்தலில் வெற்றி பெறுவதற்காகவாவது ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கும் ஜனாதிபதி தற்சமயம் வந்துள்ளார். ☆

## அணித்தலைவர் பதவியிலிருந்து சனத் ஜெயசூரிய ராஜினாமா!

(கொழும்பு)

சனத் ஜெயசூரிய இலங்கைக் கிரிக்கெட் அணித் தலைவர் பதவியிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகிவிட்டதாக அறிவித்துள்ளார்.

அடுத்த உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டிக்குப் பொருத்தமான அணித்தலைவர் ஒருவரை தெரிவு செய்வதற்கு வசதியாகவே தான் இப்பதவியிலிருந்து விலகியதாக சனத் ஜெயசூரியப தெரிவித்தார்.

ஜெயசூரியா அணித் தலைவராக இருந்தபோது இலங்கைக் கிரிக்கெட் அணி 38 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 18 இல் வெற்றி பெற்றுள்ளது என்பதும், 189 ஒரு நாள் போட்டிகளில் விளையாடி 67 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## பொது அறிவுப் போட்டி விண்ணப்ப திகதி நீடிப்பு

கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் மக்கள் வங்கி 'சிசு உதான' கணக்கு வைத்திருக்கும் மாணவர்களுக்கிடையே நடத்தவிருக்கும் பொது அறிவுப் போட்டிகளுக்கு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி, 30.05.2003 வரை நீடிக்கப்பட்டுள்ளதாக மக்கள் வங்கி, யாழ்ப்பாண பிராந்திய முகாமையாளர் மு.க.சிவபாத விருதையர் அறிவித்துள்ளார்.

# சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் ஈழத்தமிழர் நடத்திய பேரணியிலிருந்து....







சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில், ஐ.நா. உபமன்றில் கடந்த திங்களன்று நடைபெற்ற ஐ.நா. மனித உரிமைகள் மாநாட்டின் போது - புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் மாபெரும் பேரணியொன்றை நடாத்தினர். 'சுய நிர்ணய உரிமை வேண்டும்', 'எமக்கு வேண்டும்' எமது தாயகம் - என உணர்வெழுச்சியுடன் நடந்த இப் பேரணியின் முடிவில் - விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சிறப்புரையாற்றினார்.


















நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

**மலேசியா/பிரித்தானியாவில் உயர்கல்வி**

மலேசியாவில் இரண்டு வருடம் பிரித்தானியாவில் ஒரு வருடமும் கல்விகற்று நீங்களும் ஒரு பொறியியலாளராகலாம்.

- ☆ பாடநெறி ஆரம்பம் மே/யூன் 2003
- ☆ ஆகக்குறைந்த தகைமை G.C.E (O/L)
- ☆ பாடநெறிக்கட்டணத்தை இலகுவாக தவணை முறையில் செலுத்தலாம்.
- ☆ விசா ஒழுங்குகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்க.
Far Overseas Educational Consultants
444C 2/1, Galle Road, Ratmalana
யாழ். தொடர்புகளுக்கு 30 1/1 சிராம்பியடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
Tel:- 0777-578059 (வ.கி.மாகாண இணைப்பாளர்)
072-859041
E.Mail:- ecolenviros@ dynaweb.lk (சி-765)

# இசை, நடன, நாடக விழா திருமலையில் நிறைவுற்றது

(திருகோணமலை)

மானுடத்தின் தமிழ்க்கூடல் - II திருகோணமலையில் நேற்று நிறைவு பெற்றது. கடந்த 8 ஆம் திகதி முதல் திருகோணமலை விவேகானந்தாக் கல்லூரியில் நடைபெற்று வந்த இம் மாபெரும் முத்தமிழ் விழாவில், தாயகப்பிரதேசங்களின் பல்வேறு கலை வடிவங்கள் இன்னிசை விருந்தாக, நாட்டிய நிகழ்வாக, நாடக ஆற்றுகைகளாக காட்சிப்படுத்தப்பட்டன. நிறைவுநாள் விழாவில் பல நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.

மற்றும் இன்னிசை நிகழ்வு, உரையரங்கு என்பவற்றுடன், தமிழகத்தின் பிரபல பின்னணிப்பாடகி ரி.கே.கலாவின் இசைநிகழ்வும் நடைபெற்றது.

## மரண அறிவித்தல்

### திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், நல்லூர் வைமன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் வள்ளியம்மை அவர்கள் நேற்று (12.04.2003) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம் சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அண்ணாமலை, சரவணமுத்து, இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜானகியம்மா (கனடா), ஞானாம்பிகை, கந்தசாமி (கனடா), சண்முகரட்ணம் (பத்திரிகை முகவர், அச்சுவேலி), பரமேஸ்வரன் (மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்), சண்முகதாசன் (கனடா), நவநீதமணி (ஸ்ரீலங்கா ரெலிகொம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, தியாகராஜா, இரட்ணானந்தம் மற்றும் சரோஜினிதேவி (கனடா), இராஜேஸ்வரி (ஓய்வுபெற்ற உதவிக்கல்விப் பணிப்பாளர்), சொர்ணாம்பிகை, தனலட்சுமி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், புஸ்பராணி, கணேசமூர்த்தி, லிங்கேஸ்வரி, சாந்தா, வசந்தி, ஜெயந்தி, பாலச்சந்திரன், தேவகி, சுபத்திரா, சயந்தன், நாதசொரூபன் (தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்), பாலமுருகன், நாகலோஜினி (உடுவில் பிரதேசசபை), சசிகலா, மினோஜினி, பிரசாந்தி, லோஜினி, அருட்குகன் (கொழும்பு), இந்துஜா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), பேரானந்தரூபன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், சாளினி, கீதாஞ்சலி, தர்மதா, டனா, சுரேஸ், டினேஸ், கௌசிகன், வைஸ்ணவி ஆகியோரின் அருமைப்பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.04.2003) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*27, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.* (சி/839)

தகவல்:-
திரு.சண்முகரட்ணம் (மகன்),
திரு.பரமேஸ்வரன் (மகன்),
திருமதி நவநீதமணி (மகள்)

# வடக்கு-கிழக்கில் தனிஅரசு...

எண்ணிக்கையை ஆறாயிரத்திலிருந்து 16 ஆயிரமாக அதிகரித்துள்ளார்கள். அவர்களுக்குச் சகல பயிற்சிகளும் வழங்கப்பட்டு, பெருந்தொகையான ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், தேசிய நலனுக்குத் தீவிரமான அச்சுறுத்தல் எழுமானால் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தத் தயங்கப்போவதில்லை. ரணில் அரசாங்கம், புலிகள் தீர்மானிப்பது போலவே அவர்களுக்கு எல்லாவற்றையும் செய்தும், கொடுத்தும் வருகிறது. எந்த வரையறைகளும் இன்றி புலிகள் கேட்கும் அனைத்தையும்- ஆம், நல்லது என்ற தொனியில் வழங்கி வருகிறது. இது, எந்த விலை கொடுத்தும் சமாதானத்தை வெல்வதென்ற நோக்கிலேயே செய்யப்படுகின்றது.

சமாதான முயற்சிகளில் இந்தியாவின் அரசியல் ரீதியான ஆதரவு கிடைக்கும் என்று புதுடெல்கி தலைமைப்பீடம் உறுதியளித்துள்ளது.

நோர்வே, ஆரம்பத்தில் அனுசரணையாளராக இருந்து மத்தியஸ்தராக மாறி இப்போது ஆலோசகராகச் செயற்படுகிறதா என்று அமிர்பர்வா எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி சந்திரிகா -

எது எப்படியிருப்பினும் இறுதிக் கட்டத்தில் இலங்கையில் நியாயமான ஆர்வம் காட்டக்கூடிய நாடாக இந்தியா மட்டுமே இருக்கிறது. வரலாறு, புவியியல், பொருளாதாரத் தொடர்புகள் ரீதியாக இந்தியாவுக்கே இந்த உரிமை உள்ளது.

இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டிற்குள் எத்தகைய தீர்வு எட்டப்பட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது. எமது அரசாங்கம் சில காலத்திற்கு முன்னர் சமர்ப்பித்த சமஷ்டி அதிகாரப் பகிர்வுத் திட்டத்திற்கு இந்தியா ஆதரவு தரக்கூடிய சூழலே உள்ளது என்றார்.

1995 ஆம் ஆண்டு போல, புலிகள் சமாதான முயற்சிகளை முறித்துக்கொண்டு தாக்குதல்களை நடத்தமாட்டார்களா என்று கேட்ட கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி சந்திரிகா -

புலிகள் 18 வருட யுத்தத்தின் மூலம் பெறமுடியாதவற்றை ஒரு வருட அமைதி முயற்சிகள் மூலம் பெற்றுள்ளனர். இதனால் புலிகள் அப்படி இடையில் முறித்துக் கொள்ளமாட்டார்கள்.

புலிகள் மெதுவாக - ஆனால் உறுதியாகப் பேச்சுக்களை நடத்திக்கொண்டு தம்மைப் பலப்படுத்தி ஈழம் என்ற இலக்கு நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

ரணில் அரசாங்கத்தைப் பதவியில் இருந்து நிறுத்த வேண்டிய நிலை எனக்கு இப்போது இல்லை. ஆனாலும், மக்கள் எனக்கு அளித்த கடமைப் பொறுப்பின் அடிப்படையில் அதைச் செய்யும் நிலை ஏற்படலாம். எனது கட்சிக்கு அதிகாரத்தைக் கொண்டுவர அரசாங்கத்தை மாற்ற ஆர்வம் காட்டவில்லை.

புலிகளின் மரண அச்சுறுத்தல் எனக்குத் தணிந்ததாக இல்லை. படையினரும் எனக்குப் புலிகளின் நேரடியான அச்சுறுத்தல் இருப்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். ரணில் அரசாங்கம் பதவிக்கு வந்தபோது - அவரிடம் நான் - நீங்கள் எனது அமைதி முயற்சியைக் குலைத்ததைப் போல நான் செய்யமாட்டேன் என்று நேரடியாகவே தெரிவித்திருக்கிறேன்.

நீங்கள் எம்மிடம் உதவி கோரினால் கடந்த 8 வருடங்களில் அந்தப் பிரச்சினையை எவ்வாறு கையாண்டோம் என்பது பற்றிக் கூறத் தயார் என நான் தெரிவித்தபோது - அதற்கான அழைப்பு இதுவரை கிடைக்கவில்லை என்றார்.

## வடமராட்சி...

கடற்பகுதிக்குச் செல்லவிடாது தடுத்தனர். அதையும் மீறி தாம் தடுப்போம் என்று முற்பட்ட மீனவர்களை துப்பாக்கியைக் காட்டிக் கடற்படையினர் அச்சுறுத்தியுள்ளனர்.

அத்தோடு - பிடிக்கப்பட்ட இந்திய ட்ரோலர் ஒன்றினையும், மீனவர்களையும், வடமராட்சி மீனவர்களிடமிருந்து மீட்ட கடற்படையினர், அவர்களைத் தொடர்ந்து செல்ல அனுமதித்ததோடு நாங்களும் அவர்களைப் பிடிக்கமாட்டோம் நீங்களும் அவர்களைப் பிடிக்கக் கூடாது என்று எச்சரித்துள்ளனர்.

இதேவேளை - நேற்று மாலை வரை மீன்பிடிக்கச் சென்ற உள்ளூர் மீனவர்கள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதனால், வடமராட்சி மீனவர்கள் மத்தியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது. (15)

## ஜப்பான்....

இலங்கையுமே பாதிப்புற்றபொழுதிலும், வடக்கு - கிழக்கு பிரதேசமே மோசமாகப் பாதிப்புற்று, அபிவிருத்தியும் இன்றிக் காணப்படுகின்றது. இதனால், இப்பகுதிக்கு உடனடி வெளிநாட்டு உதவி தேவை. தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பினால், புனர்வாழ்வு மற்றும் புனர்நிர்மாணப் பணிகளை உடனடியாக ஆரம்பிக்க முடியாத நிலை காணப்படுகின்றது. இக்காரணங்களால், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் இந்த முக்கிய மாநாட்டுக்கு- அவர்களது மக்களின் அபிலாஷைகளை தெரிவிக்கும் பொருட்டு அழைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.

நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் கட்டியெழுப்ப யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்ட விடயங்கள் உடனடியாக அமுல் செய்யப்படவேண்டும். அத்துடன், இணக்கம் காணப்பட்டவாறு மக்கள் மீள் குடியேற்றமும் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இயல்பு வாழ்வை வலியுறுத்தி மேதினப் பேரணிக்கு ஏற்பாடு!

## நேற்றைய கலந்துரையாடலில் முடிவு

எதிர்வரும் மேதினத்தை, இயல்பு வாழ்வை வலியுறுத்துவதாக, யாழ். குடாநாட்டில் மிகப்பிரமாண்டமாக நடாத்துவதென நேற்று நாவலர் மண்டபத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் முடிவெடுக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தமிழரின் அபிலாஷைகளை, விடுதலை உணர்வினை, மக்களின் இயல்பு வாழ்வினை வலியுறுத்தி இடம்பெறும் இந்த மேதின நிகழ்வில் - ஐநூறுக்கும் மேற்பட்ட ஊர்திகள் ஊர்வலமாக நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலிலிருந்து, யாழ். மத்திய கல்லூரி மைதானம் வரை செல்லவுள்ளன. (லி)

**விற்பனைக்குண்டு**

சகல விதமான **Phone cards** விற்பனைக்குண்டு

**ஸ்ரீ முருகன் கொமினிகேசன்**
303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
T.P No 222 2670
222 3214
(சி.:834)

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ மாணவர் மன்றத்தினரின் முகாமைத்துவ நோக்கு சஞ்சிகை வெளியீட்டிற்காக யாழ். முன்னணிக் கலைஞர்களுடன் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் இணைந்து வழங்கும்.

**சீத்ர கானங்கள்**

காலம்:- 16-04-2003 (புதன்கிழமை)
நேரம்:- 9.30 A.m, 2.30 Pm புதிய நேரம்
இடம்:- கைலாசபதி கலையரங்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
முகாமைத்துவ மாணவர் மன்றம்.

ஊடக அனுசரணை நமது ஈழநாடு

கலை, பண்பாட்டுக் கழகம் நடாத்தும்

தமிழகத்தின் பிரபல பின்னணிப் பாடகியும் தமிழ் இசைப் பாடகியுமான

**ரீ.கே.கலா**

தமிழீழ இசைக் கலைஞர்களுடன் இணைந்து வழங்கும்

மாபெரும் தமிழ் இசை மாலை

இடம்: யாழ். வீரசிங்கம் மண்டபம்
காலம்: 16.04.2003 (புதன்) பி.பகல் 4.00மணி.



நமது ஈழநாடு

ராம்கோ சீமெந்து

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.04.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.